Free Circulation Germany- England

மணி: 75 - ஓசை: 345 ஆனி. June 2025




# வெற்றிமணி

Vettimaniy

ESTD 1950

31 TH years IN EUROPE Successful Publishing

பிரதம ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் B.F.A

## தமிழ் மக்களின் ஆணையை தமிழ்த் தலைமைகள் மதித்து நடப்பார்களா?

கொழும்பிலிருந்து... என்.அசோக்

### வெற்றிமணி 31 ஆண்டுகள் நிறைவு!

வரலாற்றின் கல்வெட்டாய்
வழுவாத சொல்வெட்டாய்
வெற்றிமணியின்
மற்றுமொரு மைல்கல்!

சேவியர் – தமிழ்நாடு



### காலம் எனக்களித்த வரம்

பேராசிரியர்.சி.மௌனகுரு

### எங்கட ஆச்சி சொன்ன அந்த மூண்டு விசயம்

இதழ்: 345



### வானவில் போலொரு வாலிபம்






# அவன் மைசூர் மன்னன் ஆனான் நான் வெறும் சைபர் ஆனேன்



● மாதவி

மைசூர் மகராஜாவின் அரண்மனை முன்பு நானும் அவளும். அவளுக்குப் பிடிக்காததை எல்லாம் நான் செய்வேன். கேட்டால் அது என் விருப்பம் தனி என்பேன். சில நேரம் சண்டையில் என்ன பார்த்தோம் என்பதே மறந்தும் போகும்.

எதையுமே ஒருவருக்குகொருவர் பிழை என்று தெரிந்தாலும் விட்டுக்கொடுக்காத விசித்திரமான காதல் எமது.

ஒருவன் உல்லாசப் பயணிகள் மத்தியில் அவன் எங்களை விடாமல் பின்தொடர்ந்த வண்ணம் இருந்தான். எம்மை ஏமாற்றிப்பிழைப்பவன் அவன். அவனுக்கு இடம் கொடுத்தால் எம்மை மடக்கிப் போடுவான், திரும்பி பார்க்காதே என்று அவளையும், எச்சரித்தபடி அவனை அசட்டை பண்ணியதாக நடந்தோம். இதில் மட்டும் எப்படிக் கருத்தொருமித்த காதலர் ஆனோம் என்பது புரியவில்லை. அவன் எதோ வழியில் எம்மை குறுக்கிட்டு, நிறுத்தி இந்த செப்புவளையலை வாங்குங்கள் 500 ரூபாதான் என்றான். நாம் “இது தேவை இல்லை எமக்கு“ என்றோம். அவன் விடுவதாக இல்லை.



எமக்கு படங்களில் வரும் வளையல்காரன் ஞாபகம் வந்தது.ஆனால் அவன் போல் இவன் தலைப்பாகட்டி இல்லை. ஒல்லியாய் காய்ந்துபோய் இருந்தான்.

நாம் வேகமாக நடந்தோம். அவன் மீண்டும் குறுக்கிட்டு இந்த வளையலை நீங்கள் சொல்லும் விலைக்கு தருகின்றேன். எனக்குப் பணம் அவசியம் தேவை என்றான். அவன் முகத்தில் ஒரு தேவையின் ஏக்கம் தெரிந்தது. இருந்தாலும் இவங்கள் சுற்றுலாப் பயணிகளை ஏமாற்றிப் பிழைப்பவர்கள் என்ற முத்திரை எம்மனதில் ஆழக்குத்தப்பட்டு விட்டதால் நம்மால் எதுவும் செய்ய முடியவில்லலை.

அவன் திரும்பிவிட்டான். நாம் திரும்பித் திரும்பிப் பார்த்தோம். அவனைக் காணவில்லை. அந்த ஏக்கமான முகம் மட்டும் எமக்குத் திரும்பத் திரும்ப தெரிந்த வண்ணமே இருந்தது.

அரண்மனை பார்த்து முடித்துவிட்டு திரும்பினோம். அதே முகப்பில் அவன் நின்றான். என்னவள் சொன்னாள் “அவன் பாவமாக இருக்கிறான் ஒரு 200 ரூபாவை சும்மா கொடுத்துவிட்டு வாருங்கள்“ என்று.

நான் அவனிடம் சென்றேன் 300 ரூபாவை கொடுத்தேன். அவனுடைய அந்த முகத்தில் சோகம் இருந்தது ஏக்கம், இருந்தது ஆனால் “.அவன் சொன்னான் எனக்கு பொருள் விற்காமல் காசு வேண்டாம்.

இரக்கத்தால் வேண்டாம். “அது என் காதலிக்குப் பிடிக்காது‘ என்றான்.

அவன் என்னை விட்டு வேகமாக அடுத்த சுற்றுலாப் பயணியிடம் சென்றான். அவன் மைசூர் மன்னனானன் நான் சைபர் ஆனோன்.

இருபது ஆண்டுகள் ஆகியும் இன்னும் அவன் முகம் என்நெஞ்சில் ஆழப்பதிந்தே உள்ளது. அவனை என்வாழ்வில் என்றுமே சந்திக்மாட்டேன் என்பது மட்டும் நிச்சயமாக இந்த வில்லனுக்குத் தெரியும்.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 345





ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்

அமரர் மு.க.சுப்பிரமணியம்

( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்

'ஓவியக்கலைவேள்'

மு.க.சு.சிவகுமாரன்

Chief Editor:

M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333

+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com


"வெற்றிமணிமொழி"

தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது


Vettimaniy Ltd

Company No: 8876276


## தமிழ் மக்களின் ஆணையை

# தமிழ்த் தலைமைகள் மதித்து நடப்பார்களா?



கொழும்பிலிருந்து...

**என்.அசோக்**

மீண்டுமொரு 'முள்ளிவாய்க்கால்' நினைவு தினத்தை (16 ஆவது ஆண்டு நினைவு தினத்தை) தமிழினம் அனுஷ்டித்திருக்கிறது. ஈழத் தமிழர்கள் தாயகத்திலும் புலம்பெயர் தேசத்திலும் கனத்த இதயத்துடன் அந்த துயர்மிகுந்த நாளை நினைவுகூர்ந்திருக்கிறார்கள்.

அந்த அடிப்படையில் இந்த ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவு தின மாதத்தில் இரண்டு விடயங்கள் தமிழ் மக்களிடத்தில் பேசுபொருளாக உருவெடுத்திருக்கிறது. அதனை பேசுபொருள் என்று கூறுவதை விட,தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டிய ஒரு விடயமாக அமைந்திருக்கிறது என்று கூறுவதே பொருத்தமாகும்.

ஒன்று கனடாவில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டிருக்கும் தமிழினப் படுகொலை நினைவுத்தூபி விவகாரம்.

இரண்டாவது; அண்மையில் நடைபெற்று முடிந்துள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கியிருக்கும் ஆணை.இந்த இரண்டு விடயங்களும் சமகாலத்தில் தமிழர் தாயகத்துக்கு முக்கியமான செய்தியை வழங்கியிருக்கிறது.அதாவது அண்மைய தேர்தலினூடாக தமிழ் தலைமைகள் ஒன்று சேரவேண்டுமென்ற ஆணையை தமிழர் தேசம் வழங்கியிருக்கிறது. கடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வடக்கு – கிழக்கில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநி



தித்துவதற்கு ஈடாக சிங்கள – பௌத்த மேலாதிக்கக் கொள்கையை கொண்ட தேசிய மக்கள் சக்தி முகமூடியணிந்த ஜே.வி.பி.யும் வெற்றிபெற்றிருந்தது. இந்த வெற்றி இலங்கையில் இன மோதல் என்ற ஒரு விடயம் இல்லை என்பதை சர்வதேச சமூகத்துக்கு காட்டுவதற்கும், சிங்கள – பௌத்த ஆக்கிரமிப்பை வடக்கு – கிழக்கில் தொடர்வதற்கும், நிலங்களை அபகரிப்பதற்கும், இனமோதல் தீர்வு தொடர்பில் பேச வல்ல சர்வதேச சக்திகளின் வாயை அடைக்கவும் ஜே.வி.பி.அரசாங்கத்துக்கு ஒரு பலம்பொருந்திய கதவு திறக்கப்பட்டிருந்தது.

ஆனால்,இது மிகவும் ஆபத்தானது என்பதை உணர்ந்துகொண்ட தமிழ் மக்கள், தாங்கள் எழுதிய விதியை குறுகிய காலத்துக்குள் அதாவது அண்மைய தேர்தலில் திருத்தி எழுதியிருக்கிறார்கள்.

20 ஆம் பக்கம் பார்க்க...







# மலைக்க வைத்த மலையகம்

## மலைத்தேன் : 02


க.ஆதவன்

தூக்கம் தெளிந்தவொரு காலையில்.. கையில் தேனீருடன் வந்து நிற்கிறாள்.

ஆண்டுகள் பலவாய் நான் சுவைத்த தேனீர்.

-நல்லா தூங்கினீங்களா- அவள். -ஓம்- என்றேன் நான்.

100 வகுப்புகளாய்..-வேருக்குநீர்- அமைப்பினூடாக என்னிடம் படித்த மாணவிதான் அவள்.

மலைக்காற்று ஒரு தென்றலை வீசி எறிந்து விட்டுப் போனது. ஒரு பிளாஸ்ரிக் கதிரையில் அமர்ந்து கொண்டிருந்தேன். அருகில் மாணவி கையில் தேனீருடன்.

விழித்தபோது...என் முன்னே மலை. கீழேயும் மேலேயும் கொழுந்துச் செடிகள். ஓடிப்போய்ச் செடிகளைத் தடவலாமா...அச் சிற்றருவியில் என்னுடல் நனைக்கலாமா என்பதே என் எண்ணமாயிருந்தது.

ஓடு! இதற்காகத்தானே காத்திருந்தாய். உள் மனம் ஓங்கிச் சொல்லிற்று.

-அங்கே நான் போகலாமா- என்று கேட்டேன்.

போய்ட்டு வாங்க சேர். தம்பியைக் கூடக் கூட்டிட்டுப் போங்க. சறுக்கும் என்றாள்.

தம்பி கையைப் பிடிக்க.. இறங்கலானேன்.

இறங்குதல் இலகு ஏறுதல் தான் சிரமமென அந்நாளில் ஆர் ஒரு தமிழ் வாத்தி சொன்னது நினைவில் வருகிறது.

இறங்கினேன்.குளித்தேன்.அச்சிற்றருவியிற்றான் ஆயிரம் ஆண்டு அடிமை வாழ்வு இருந்திருக்கிறது. ஆயிரம் ஆண்டு என நான் சொல்வது...இரு நூறாண்டு.

குளித்து, பல்துலக்கி, பள்ளிக்கூடம் போய்,சீருடையணிந்து, பட்டம் பெற்று, இப்போ ஒரு ஆசிரையாய்.. கையில் தேனீருடன்

நன்றாகத் தூங்கினீர்களா எனக் கேட்கும் என் மாணவியின் அன்பை ...

அவ்வாழ்வைக் கண்டு மலைத்தேன். பிறகு,அந்தமலையும் மாருதமும் பிடித்துப் போயிற்று. அவளின் தம்பியும் அவனின் நண்பர்களும் நானும் நண்பர்களானோம். மலையும் கொழுந்துகளும் போல. இளரத்தம் கொண்டவனொருவன் திறீ வீலர் வைத்து தன் குடும்பத்தையும் தன்னையும் ஓட்டிக்கொண்டிருந்தான்.

சாகசப் பயணங்கள் செய்தோம். சாமத்தில் கொழுந்திடை நெருப்பு மூட்டினோம், தொண்டை கிழியக் கத்தினோம், மலை எதிரொலிக்குமா எனப் பரிசோதித்தோம், உண்மையில் சிறுத்தைப்புலி இங்கிருக்கா என்று தேடினோம். தான் கண்டதாக ஒருத்தன் சொன்னான். உண்மை என்பதை வத்தேகம பலதெனிய போகும் போது பின்னர் நான் உறுதி செய்தேன். நேரே காணவில்லை காற்றடங்களைப் பார்த்தேன். அவ்வூர் மக்களும் சொன்னார்கள். அவர்களுடன் ஆடிப்பாடிப் போகும் வழியில் ஒரு எஸ்ரேற்றைக் காட்டி! சேர் இது பொல்லாத எஸ்ரேற் இங்கு பல கொடுமைகள் நடந்திருக்கு என்று சொன்னார்கள். தங்கள் மூதாதையர் சொன்னதாகச் சொன்னார்கள். என்ன கொடுமை,என்ன அடிமைத்தனம் என அங்கிருக்கும் நாட்களில் சுற்றித்திரிந்து விசாரித் தன். கொடுமை நடந்திருக்கு என்கிற கருத்தை எல்லோரும் சொல்கிறார்கள்.

**தெரியாத மர்மங்கள். (தொடரும்)**

---







# குரும்பசிட்டடி பொன்.பரமானந்தர் திருவுருவச்சிலை திறப்புவிழா

குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் பாடசாலையின் 125 ஆவது ஆண்டை நோக்கிய பயணத்தின் முக்கிய நிகழ்வாக பாடசாலை நிறுவுநர் அமரர் பொன்.பரமானந்தர் அவர்களின் திருவுருவச்சிலை 30.04.2025 புதன்கிழமை காலை பிரதமவிருந்தினராக கலந்துகொண்ட தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவரும் சிவபூமி அறக்கட்டளைத் தலைவருமான கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

சிறப்புவிருந்தினராக கலந்துகொண்ட எமது பாடசாலையின் பழையமாணவனும் வலிகாமம் கல்வி வலயத்தின் ஆரம்பக்கல்வி பிரதிக் கல்விப்பணிப்பாளருமான திரு.சி.முரளீதரன் அவர்கள் நிறுவுநரின் திருவுருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து கௌரவித்தார். தூரநோக்கோடு குரும்பசிட்டிக் கிராமத்தின் கல்வி வளர்ச்சி கருதி, தனது மிகமிக இளமைக் காலத்தில் (21 ஆவது வயதில்) பாடசாலையை நிறுவிய சமூகசிந்தனையாளர் அமரர் பொன். பரமானந்தர் அவர்களுக்கு நாம் செய்யும் கௌரவம் ஆகும்.

இப்பணிக்கு அன்னாரது பேரப்பிள்ளைகள் பழையமாணவர் சங்கம் ஊடாக கைகொடுத்து உதவியிருப்பது மிகச் சிறப்பான விடயமாகும்.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# திருமணங்கள் தள்ளிப் போவதன் விளைவுகள்

**தள்ளிப்போகும் திருமணங்களும் தடுமாறும் பெற்றோரும் சென்றமாத தொடர்ச்சி....**

## உயர்கல்விக்கும் தொழில் மேம்பாட்டுக்கும் தரப்படும் முக்கியத்துவம்

திருமண வயதுக்கு வந்துவிட்ட பல இளைஞர்கள் தங்கள் கல்வி மற்றும் தொழிலுக்கே முன்னுரிமை கொடுக்கிறார்கள், பெரும்பாலும் உயர் பட்டங்கள் அல்லது தொழில் முறை இலக்குகளை முன்வைத்து இயங்குகின்றார்கள். கல்விக்கான காலக்கெடுவை நீடித்தல், வேலை வாய்ப்பில் நிலையானதொரு இடத்தைப் பிடித்துக்கொள்ளுதல், செய்யும் தொழிலில் மேலும் மேலும் முன்னேறும் வழிகளை ஆராய்தல், போன்ற விடயங்களில் நேரத்தை முதலீடு செய்வதால் திருமணம் தள்ளிப்போகும் நிலை ஏற்படுகின்றது.

## தன்னம்பிக்கையை வலுப்படுத்தும் முயற்சிகள்

இளைஞர் யுவதிகளுள் பலரும் திருமணபந்தத்தில் தம்மை இணைத்துக் கொள்ளுவதற்கு முன் தமது தனிப்பட்ட ஆர்வங்களைப் பூர்த்தி செய்யவும் உல்லாசப் பயணங்களை மேற்கொள்ளவும் திருமணத்துக்கு முற்பட்ட சுதந்திர காலத்தை முழுமையாக அனுபவிக்கவும் விரும்புகிறார்கள். இவற்றின் மூலம் வாழ்க்கை அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளவும் அதன்மூலம் வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் குடும்ப வாழ்க்கைக்கு அவசியமான, வலுவான தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளமுடியும் எனவும் அவர்கள் நம்புகின்றார்கள்



முனைவர்
பாலா. சிவகடாட்சம்
(கனடா)

## நிதி நிலைத்தன்மை

பெற்றோரின் நிழலில் இருந்து விலகித் தனிக் குடித்தனம் போகவிரும்பும் இளைஞர் யுவதிகள் அடுத்து தாம் எதிர்கொள்ளவேண்டிய பொருளாதார நெருக்கடிகள் குறித்து அச்சம் அடைகின்றார்கள். இவர்களுட் பலரும் திருமணத்திற்கு முன், மாணவர் கடனை அடைப்பது, வீடு வாங்குவது அல்லது நிலையான வேலையைப் பெறுவது போன்ற நிதி நிலைத்தன்மையை அடைய வேண்டும் என்று நினைப்பதில் ஆச்சரியம் இல்லை.

## திருமண விதிமுறைகளில் கலாச்சார மாற்றம்

அதிக விவாகரத்து விகிதங்களைக் கொண்ட சூழலில் வளர்ந்து வரும் இளைஞர்கள் யுவதிகள் தமது வாழ்க்கைத் துணையைத் தெரிவுசெய்யும்போது அச்சத்துடனும் மனக்குழப்பங்களுடனும் திருமணத்தை அணுகுகின்றார்கள். திருமணத்திற்கு விரைந்து செல்வதில் அதிக எச்சரிக்கையுடன் இருக்கின்றார்கள். இவர்களுட் சிலர் நண்பர்கள் உறவினர் என்று பலரிடமும் ஆலோசனை பெற விரும்பும்போது திருமணத்துக்கு அவர்கள் தயாராக இல்லை என்பதை ஊகிக்க முடிகின்றது.



மேற்கத்திய சமூகங்களில் திருமணம் குறித்த அணுகுமுறை கணிசமாக மாறிவிட்டது. இளம் வயதில் திருமணம் செய்து கொள்வதற்கு சமூக அழுத்தம் குறைவாக உள்ளது. மேலும் மக்கள் திருமணத்தை ஒரு தேவையை விட பல வாழ்க்கைத் தேர்வுகளில் ஒன்றாகப் பார்க்கிறார்கள். திருமணம் செய்யாமல் ஓர் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வது சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு வாழ்க்கை முறையாகிவிட்டது.

பாரம்பரியமாக, திருமணம் என்பது ஒரு குடும்பத்தைத் தொடங்குவது, பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வது என்பவற்றுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டு வந்துள்ளது. இன்று உடனுறைவு மற்றும் ஒரே பாலின திருமணங்கள் என்பவற்றை அங்கீகரிப்பதும், சட்ட பூர்வமாக்குவதும், திருமணம் என்பதன் பாரம்பரிய உறவு முறை பற்றிய விளக்கத்தைப் பலவீனப் படுத்திவிட்டன. உறுதிப்படுத்தப்பட்ட நீண்ட கால கூட்டுவாழ்வாக திருமணத்தை மக்கள் பார்க்கும் விதம் மாறி வருகின்றது.

இன்று, யுவதிகள் பலரும் திருமணத்துடன் கூடவே குழந்தைகள் பெற்றுக் கொள்வதையும் தாமதப்படுத்துகிறார்கள் அல்லது அதுபற்றி மறுபரிசீலனை செய்கிறார்கள்.

குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளாமல் இருப்பது திருமணத்திற்கு வெளியே குடும்பங்களைத் தொடங்க வசதியாக இருக்கும் என்று நம்புகின்றார்கள். இந்தக் காரணிகள் ஒரு வித்தியாசமான சமூக சூழலை உருவாக்குகின்றன. இதுவே பலர் திருமணத்தைப் பெரும்பாலும் வாழ்க்கையின் பிற்பகுதிவரை தாமதப்படுத்துவதற்கும், அல்லது திருமணமே வேண்டாம் என்று முடிவெடுத்துக் கொள்வதற்கும் வழிவகுக்கின்றது.

பெண்கள் மற்றும் தம்பதிகள் குழந்தைகளைப் பெறுவதைத் தாமதப்படுத் தும் சமூக-பொருளாதார காரணிகள் மற்றும் பல உள்ளன. மலிவு விலையில் வீடுகள் இல்லாமை, பெண்களுக்கான நெகிழ்வான மற்றும் பகுதிநேர வேலை வாய்ப்புகள் இல்லாமை, மலிவாகக் கிடைக்கக்கூடிய குழந்தை பராமரிப்பு வசதிகள் இல்லாமை என்பனவும் தற்போதைய குறைந்த பிறப்பு விகிதங்களுக்கு பங்களித்துள்ளன. பெண்கள் குடும்பத்தைத் தொடங்குவதைத் தாமதப்படுத்தும்போது கருப்பை முதுமை அடைவதாலும் அது தொடர்புடைய காரணங்களாலும் அவர்களின் கருவுறுதல் அளவுகளில் குறிப்பிடத்தக்க சரிவு ஏற்படுகின்றது.

28 ஆம் பக்கம் பார்க்க...




SRI LANKA
12 ADULTS
13 NIGHTS 14 DAYS TOUR PACKAGE
WITHOUT
FLIGHT TICKET
1349 €
15 SEPTEMBER
START
1.Colombo Fairway Colombo
2. Sigiriya Sigiriya Village
3.Sigiriya Sigiriya Village
4. Kandy Mount Randholee
5. Ella/ Haputale Morning Dew or similar
6. Ella/ Haputale Morning Dew or similar
7.Yala Chaarya resort & spa
8. Yala Chaarya resort & spa
9.Bentota The Palms
10. Bentota The Palms
11. Bentota The Palms
12. Bentota The Palms
13. Bentota The Palms
14. 14 Departure
0234 2399032 | 0179 14 84892
INFO@LUCKY-FLY.DE | WWW.LUCKY-FLY.DE
Alleestr.38-40a im
Edeka- Center
44793 Bochum
Tel: 0234-2399032
Luckyfly



# “ஆம்பிளை சேர்மாருக்குக் கிட்டப் போகாதே”



நித்.T.நித்தியானந்தன்
(அவுஸ்திரேலியா)

“ஆம்பிளை சேர்மாருக்குக் கிட்டப் போகாதே. கொப்பியை மேசையில் வைத்து விட்டு, உடனே திரும்பி வந்துவிடு!

“இப்படி மகளிடம் சொல்லியிருக்கிறேன்” என்று ஒரு தாய் இன்று காலையில் அக்கறையோடு என்னிடம் கூறினார்.

அவர் பட்டப் படிப்பெல்லாம் படித் தவரல்ல ஒரு சாதாரண பெண். மனதில் பயம்.கடந்த மாதம் இலங்கையில் ஒரு மாணவியின் தற்கொலைக்கான காரணங்கள் உலகில் எத்திக்கில் வாழ்ந்தாலும் பெற்றோரை திகில் கொள்ள வைத்துவிட்டது.

என் போன்றவர்கள் பாடசாலை சென்ற காலத்தில், “பிள்ளைபிடி காரரெல்லாம் திரிகிறாங்களாம் கவனம்” என்று மட்டும் தான் எச்சரிக்கப்பட்டோம்.

Little Red Riding Hood என்ற பிள்ளைகளுக்கான பிரசித்தி பெற்ற கதை, “தெரியாதவர்களை நம்பாதே” என்ற புத்தி மதியுடன் முடிகிறது.

மேலே சொல்லப்பட்ட தாயார், தனியொருவர் அல்லர். இவர் போல், ஆயிரக் கணக்கானோர் உளர். காலப்போக்கில் இவர்களின் பயம் தணிந்துவிடுமாயினும், இவர்களை இத்தகைய உளநிலைக்குக் கொண்டுவந்தவை, வாய்மொழி மூலமும், சமூக ஊடகங்கள் மூலமும் அடிபட்ட, உண்மையும், வதந்தியும் கலந்த செய்திகளே.

இவற்றுக்குப் பின்னணியில் உள்ள, ஒரு இளம் மாணவியின் தற்கொலை மிகக் கொடூரமானது. இந்த மரணத்துக்கான சரியான காரணங்களை அல்லது காரண கர்த்தாக்களைக் கண்டறிவதும், ஏற்ற நடவடிக்கை எடுப்பதும் சட்டத்தின் பொறுப்பாக இருக்கும் அதே வேளையில், இதற்கு இறுதிப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள், அரசாங்கமும் அதிகாரிகளுமே ஆவர்.

பிள்ளைகளின் பாதுகாப்பு என்பது ஒரு சிறிய விடயமல்ல. அண்மைக் காலங்களில், வளர்ச்சியடைந்த நாடுகளில் இதற்கு அதி தீவிரமான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருவதைக் காண்கிறோம். தனது பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கு, ஒரு நாடு பணக்கார நாடாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை. அக்கறை இருந்தால் போதும்..



ஆட்சியில் இருந்த அரசாங்கங்களின் அக்கறை எங்கே இருந்தது என்பது சொல்லித் தெரியவேண்டிய ஒன்றல்ல. இனத் துவேசத்திலும், சொந்தமாகப் பணம் குவிப்பதிலும் செலுத்திய அக்கறையில் ஒரு கடுகளவாவது, நாட்டின் எதிர்காலமாக இருக்கும் பிள்ளைகளின் பாதுகாப்பின் மீது செலுத்தப்பட்டதா?

1998ம் ஆண்டில் இலங்கையில் National Child Protection Authority என்ற பெயரில் ஒரு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. இந் நிறுவனத்துக்கு, 2023, 2024ம் ஆண்டுகளில் முறையே 872 மற்றும் 901 பாலியல் சம்பந்தமான முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முறைப்பாடுகள் செய்ய 1929 என்றொரு தொலைபேசி எண்ணும் உண்டு (இது பற்றி, எந்தப் பெற்றோருக்காவது தெரியுமா?).

முறைப்பாடுகளுக்காகக் காத்திருப்பதோடும், குற்றம் விசாரிப்பதோடும் மட்டும் ஒரு அரசாங்கத்தின் கடமை முடிந்து விடாது. குற்றம் நடக்க முன்பே, அதைத் தடுப்பது, முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பனவே அதி முக்கியம். பிள்ளைகளைப் பாது காப்பதற்காக ஒஸ்ரேலியா எடுத்துவரும் நடவடிக்கைகளுடன் எனக்கு நேரடி அனுபவம் உண்டு. ஒஸ்ரேலியாவில் ஒரு சமூகப் பாடசாலையின் அதிபராக 31 ஆண்டுகள் கடமையாற்றிய பின்னணியிலிருந்து, ஒஸ்ரேலியா பின்பற்றும் சில விடயங்களை உதாரணமாக மட்டும் இங்கே காட்ட விரும்புகிறேன்.

ஒவ்வொரு பாடசாலையும் (சிறிதோ, பெரிதோ), பிள்ளைகளின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக ஒருவரை நியமிக்க வேண்டும்.

ஒரு முழுமையான கொள்கைத் திட்டம் தயாரித்து, அமுல்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு பாடசாலை நிர்வாகமும், தமது பிள்ளைகளுக்கு என்னென்ன ஆபத்துகள் ஏற்பட வாய்ப்புள்ளது என முன்னரே ஊகித்து, அதற்கேற்ற எல்லாப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் முன்கூட்டியே எடுக்க வேண்டும் (Risk Assessment). இந்த நடவடிக்கைகளை ஒவ்வொரு ஆண்டும் மீளாய்வு செய்து, அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

எல்லா விதமான கொடுமைப்படுத்தலில் (bullying) இருந்தும் பிள்ளைகள் பாதுகாக்கப்பட வேண்டும். (பலர் கூடியுள்ள இடத்தில், ஒரு பிள்ளையை மட்டும் வேண்டுமென்றே சுட்டிக்காட்டி, மனம் பாதிக்கத்தக்க ஒன்றைக் கூறுதல், கொடுமைப்படுத்தல் என்ற குற்றத்தின் கீழ் அடங்கும். Bullying என்பது இலங்கையில் சர்வ சாதாரணம் என்பதையும் அறிவோம். பல சந்தர்ப்பங்களில், புரியாமலே செய்யப்படுவதுமாகும்.)

ஒரு சிறிய சம்பவம் நடந்தாலும், அது உடனே பதிவு செய்யப்பட வேண்டும்.

பொருத்தமானவற்றை, அதிகாரிகளுக்கும், காவற் துறைக்கும் அறிவிக்க வேண்டும்.

பிள்ளைகள் தமது பிரச்சினை எதுவாயினும், அதை இலகுவாகவும், பாதுகாப்பாகவும் முறையிட வசதி செய்யப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு முறையீட்டையும் முக்கியமானதாகக் கருதி, ஏற்ற நடவடிக்கை எடுப்பதோடு, பதிலும் கொடுத்தாக வேண்டும்.

கெடுதலுக்கு உள்ளாகியிருக்கும் ஒரு பிள்ளையை எப்படி இனம் காண்பது என்பது பற்றிய பயிற்சி எல்லா ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.- ஒரு பிள்ளை பாடசாலைக்கு வெளியே (வீட்டில் உட்பட) கெடுதலுக்கு உள்ளாகியிருப்பது தெரிந்தால், உடனே ஏற்ற இடத்துக்கு முறைப்பாடு செய்ய வேண்டும்.

இப்படியே வரிசையாகக் கூறிக் கொண்டு போகலாம். எங்கள் பாடசாலையில், ஆசிரியர் பின்பற்ற வேண்டிய இத்தகைய பிள்ளை பாதுகாப்பு விதிமுறைகள் அறுபதுக்கு மேல் உள்ளன. இவற்றை நன்கு விளங்கிக்கொண்டோம் என்றும் ஏற்றுக்கொண்டோம் என்றும், ஒவ்வொரு ஆசிரியரும், நிர்வாக அங்கத்தவரும் ஒவ்வொரு ஆண்டும் கையொப்பமிட வேண்டும்.

இவை எல்லாம் முறையாக நடப்பதற்கு, பயிற்றப்பட்ட,சரியான தலைமையும் அவசியம். வளர்ச்சியடைந்த நாடுகளில் இருப்பது போன்ற, பிள்ளைகள் பாதுகாப்புச் செயற் திட்டமொன்று இலங்கைக்கு அவசியமானது. இதற்கு அதிக பணம் தேவையில்லை. ஆட்பலம் தேவையெனில், அது இலங்கையில் போதுமானவரை உண்டு. பல்கலைக் கழகப் பட்டதாரிகளுக்கு நியமனம் கொடுக்க வேண்டுமென்பதற்காக, அவர்களை வேலை இல்லாத அலுவலகங்களில் அமர்த்திக் கதிரைகளுக்குச் சூடேற்றுவதை விட்டுவிட்டு,

28 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# கெட்ட வார்த்தைகள் பெண்கள் அமைப்புகள் – சுயமரியாதை





கவிதா லட்சுமி
(நோர்வே)

**ஆம்,** ஒரு பெண்ணை அடக்கி விடும் வீரியம் பல வார்த்தைகளுக்கு உண்டு. உயிர்களைப் பிறப்பிப்பது பெண் உடல். உயிர்ப்புமிக்க ஒரு பெண்ணுடல் கெட்ட வார்த்தைகளாக மாறிப்போனதற்கு பின்னால் காரணங்கள் உண்டு. அவை பற்றி இப்போ எழுதவில்லை.

ஒரு பெண்ணின் முன் கெட்ட வார்த்தைகள் சொல்லப்படும் போது அவள் தன்னுடைய சக்தியை இழக்கத் தொடங்குகிறாளே ஏன்?

கெட்ட வார்த்தைகளுக்கு பயந்தே பல பெண்கள் வெளிவர துணிவில்லாமல் இருக்கிறார்களே, ஏன்?

காலாகாலமாக ஒரு பெண் இப்படியான கெட்ட பெயருக்கு ஆட்பட்டு விடக்கூடாது என்ற தொடர்ச்சியான கற்பித்தல்கள் ஏன்? இந்தக் கற்பித்தல் எதற்கு? யாருக்காக?

இப்போதெல்லாம் ‘மயிர்‘ என்பது கூட கெட்ட வார்த்தை. சில காலங்களின் முன்பு மயிருக்குப் பதிலாக ’கூந்தல்‘ என்ற சொல்லை இடம் மாற்றும் செயற்பாடுகளைக் காணக்கிடைத்தது. அப்படிக் கூந்தல் என்ற சொல்லை கெட்ட வார்த்தையாகப் பயன்படுத்த முயன்ற இடங்களில் எல்லாம் அதை எதிர்த்து பேசியும் எழுதியும் இருக்கிறேன்.

நம் தமிழ்ச் சூழலில் மட்டுமல்ல பல மொழிகளிலும் உடலுறுப்புகள் கெட்ட வார்த்தைகளாகப் பயன்பாட்டில் இருப்பது நாம் அறிந்ததே. அதிலும் பல யுகங்களாக, பெண்களின் உடல் அங்கங்கள் ஒரு மொழியின் முக்கியமான கெட்ட வார்த்தைகளாகப் மாறி விட்டிருக்கின்றன. ஏன்? எதற்கு என்று யாரும் அதைப் பற்றி எல்லாம் கவலைப்படுவதில்லை.

ஆண்கள் மட்டுமல்ல, பெண்களே தமது உறுப்புகளைக் கெட்ட வார்த்தைகளாகப் பயன்படுத்துகின்றனர். எந்த ஒரு பிரக்ஞையும் அறிவும் இல்லாமல் தமது உடல் உறுப்புகளையே கெட்ட வார்த்தைகளாகப் பயன்படுத்துவது தம்மைத்தாமே கேவலப்படுத்துவது அன்றி வேறென்ன? இவர்களுடைய சுயமரியாதை எங்கே?

ஆளுமை சார்ந்த வார்த்தைகள் கூட பெண்களுக்கு என்று வரும்போது கெட்ட வார்த்தைகளாக அர்த்த படுத்தப்படுகின்றன. குறைந்த பட்சமாகப் பெண்களேனும் தமது உறுப்புகளைக் கெட்ட வார்த்தைகளாகப் பாவிப்பதை நிறுத்த வேண்டும். அப்படிப் பாவிப்பவர்களையும் கண்டிக்கத் துணிய வேண்டுமென்று இன்றைய பெண்கள் தினத்தில் எனக்குச் சொல்லத் தோன்றியது. எமது உடல் உறுப்புகளின் தேவை இன்றியமையாதவை. உலகின் உயிர்த் தொடர்ச்சிக்கு இன்று வரை பணியாற்றிய உடல்கள் அவை.உடலுறுப்புகளின் பெயர்கள் என்னவாக இருந்தாலும் அவை பெருமித த்திற்குரியவையே.

பெண் உடல் உறுப்புகளைக் கெட்ட வார்த்தைகளாக்காது பார்த்துக் கொள்வது என்பதே பொறுப்புணர்வு!

உலகெங்கிலும் பெண்களுக்கான அமைப்புகள் பல தரப்பட்ட வகையில் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு வருடமும் பெண்கள் தினம் கொண்டாடப்படுகின்றது. புலம்பெயர் தேசங்களிலும் மகளிர் அமைப்புகள் பல இயங்குகின்றன. அவ் அமைப்புகளால் நிகழ்வுகளும் நடாத்தப்படுகின்றன. ஆனால் எத்தனை அமைப்புகள் உண்மையாகவே பெண்கள் நலன், உரிமை, மேம்பாடு கருதிச் செயல்படுகின்றன? சுயமாகச் செயற்படுகின்றன?

பெண்கள் சேர்ந்து ஒரு நிகழ்வு நடத்துவது என்றாலே முதலில் செயற்படு பொருளாக இருப்பது அத்தனை பெண்களும் ஒரேபோலச் சேலை கட்டுவதற்கான ஏற்பாடுதான். நடனங்கள் சில, பாடல்கள் சில என்பதோடு கோலப் போட்டிகள், விருதளிப்புகள் என சில மலினமான நிகழ்வுகளோடு பெண்கள் தினம் கொண்டாடப்பட்டு முடிகிறது.

சில மகளிர் அமைப்புகளில் பங்காற்றுபவர்களுக்கு பெண்ணிலை சார்ந்தும், பெண் வரலாறு சார்ந்தும் ஆழமான புரிதல் இல்லை என்பது அடிப்படைக் கோளாறு. இப்படிப் புரிதல் இல்லாமல் பெண்கள் சார்ந்த செயற்பாடுகளை எடுத்துச் செல்லும் பெண்களே சமூகத்தை மேலும் கீழிறக்குபவர்களாக இருக்கின்றனர். வரலாறு சார்ந்து பேச முற்பட்டாலும் சரி பெண்ணிலை சார்ந்து பேச முற்பட்டாலும் சரி அதற்கு எதிராகச் செயற்படுபவர்கள் இப்படியான பெண்கள் அமைப்பிலும் இருப்பது கவலைக்குரியது. இது சார்ந்த ஒரு சம்பவத்தை வேறொரு பதிவில் பகிர்ந்து கொள்கிறேன்.




அரசியல் சார்ந்த அமைப்புகள் சில, தமது கீழ்க் கட்டமைப்பாக மகளிர் அமைப்பையும் வைத்திருக்கின்றது. மகளிர் அமைப்புகள் மற்றொரு தந்தை (ஆண்களின்) கட்டமைப்பின் கீழ் நிறுவகிக்கப்படுவது முரண் நகை.வேறொரு அமைப்பின் கீழ் செயற்படும் மகளிர் அமைப்புகள் எதுவும் ஆழமான செயற்பாடுகளை கொண்டு நகர்வதில்லை. பெண்ணிலை சார் புரிதல்கள் அவர்களிடம் இல்லை என்பதே நடைமுறை உண்மை.

ஒரு விடுதலை அமைப்பு எப்படி இன்னொரு அமைப்பின் கீழ் செயல்பட முடியும்? வரலாற்றில் எப்போதும் சில பெண்கள் எழுவார்கள். தமக்காக எழுவார்கள்! அன்றிலிருந்து இன்று வரை பலர் தெருக்கள் தோறும் இறங்கிப் போராடினார்கள். இன்று, உங்களிடம் கையளிக்கப்பட்ட சமூக மேம்பாடுகள் அனைத்தும் போராடத் துணிந்த பெண்களிடம் இருந்து நீங்கள் பெற்றுக் கொண்டவை யே. அடுத்தடுத்த சந்ததிகளுக்கு வரப்போகும் மேம்பாடுகள் இன்றும் போராடத் துணிந்த பெண்களிடம் இருந்தே கடத்தப்படுகிறது. தனது நற்பெயரை, தனது வசதிகளை, பாதுகாப்புகளை, சௌகரியங்களை இழக்கத் துணிந்த பெண்களிடம் இருந்து பெற்றவையே இன்று நீங்கள் வைத்திருக்கும் சௌகரியங்கள்.

அதற்காகிலும். இடத்திலிருந்து எழுங்கள். ஒரேயொரு முறை சௌகரியங்களைத் துறக்கத் துணியுங்கள். எதிர்க்கத் துணியுங்கள்.ஒரு பெண் எழுவது அவளுக்காக மட்டுமன்று என்ற புரிதலோடு பெண்களையும், பெண் உடலையும், உறுப்புகளையும் மதிப்பது சுயமரியாதை சார்ந்ததே!




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.




# சினக்க வைக்கும் மலச்சிக்கல்

மூன்று நாளாக மலம் போகவில்லை. சரியான கஸ்டமாக இருக்கு“ என்றார் ஒருவர்.

“எனக்கு சரியான மலச்சிக்கல்“ என்ற மற்றவரது முகம் சரியான கவலையில் இருந்தது போலத் தெரிந்தது.

மலம் இறுகிக் கஸ்டப்படுகிறார் போல இருக்கு என எண்ணி “எப்ப கடைசியாக மலம் போனது“ என்று கேட்டேன். “காலமை போனது. வழக்கமாக எனக்கு ஒவ்வொரு நாளும் 3-4 தரம் போறது. இப்ப ஒரு நாளைக்கு ஒரு தரம்தான் போகுது“ என்றார்

ஆம். இந்த மலச்சிக்கல் என்ற சொல்லின் அர்த்தம் ஆளுக்காள் மாறுபடும்.

எத்தனை நாளுக்கு ஒருக்கால் மலம் வெளியேறும்? அல்லது தினமும் வெளியேறுமா? அதன் தன்மை மிக இறுகியதா இல்லையா? சாதாரணமாக வெளியேறுமா அல்லது முக்கித்தான் வெளியேற்ற வேண்டுமா போன்ற பல விடயங்களை மலச்சிக்கல் என்ற சொல்லாடல் உள்ளடக்குகிறது.

பொதுவாக வாரத்திற்கு மூன்று முறைக்கு குறைவாகவே மலம் வெளியேறுவதையே மலச்சிக்கல் என்பார்கள். மலச்சிக்கலின் போது மலம் இறுக்கமாகவும் ஈரலிப்பின்றி காய்ந்தும் இருக்கும். அத்துடன் மலம் சிறுசிறு கட்டிகளாகவும் வெளியேறலாம். அத்துடன் மலத்தை வெளியேற்றுவதற்கு அதிக முயற்சி எடுத்து முக்க வேண்டியிருக்கலாம். எவ்வளவு முயன்றும் மலம் முழுமையாக வெளியேறவில்லை என்ற உணர்வு ஏற்படுவதும் மலச்சிக்கலில் அடங்கும். மலவாயிலில் எரிவு நோ போன்ற வேதனைகளோடு மலம் வெளியேறுவதும் இதில் அடங்கலாம்.

மலம் கழித்த பின்னரும் முழுமையாக மலம் வெளியேறவில்லை என்ற

29 ஆம் பக்கம் பார்க்க...





டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்



## வெற்றிமணி முப்பத்தோரு ஆண்டுகள்!

வரலாற்றின் கல்வெட்டாய்
வழுவாத சொல்வெட்டாய்
வெற்றிமணியின்
மற்றுமொரு மைல்கல் !

தேசங்களின் எல்லை கடந்து
நேசங்களின் அன்பைக் கடைந்து
இலக்கியம் சமைத்த
இனிமையின் பயணம் !

கவிதைக் கம்பளங்களும்
கட்டுரைக் கைத்தடிகளும்
சிறுகதைகளும் சுவைத்த
கதம்பத்தின் களியாட்டம் !

வன்மத்தின் எல்லுடைத்து
பிரிவினையின் பல்லுடைத்து
அன்பினையே தருகின்ற
விருந்தின் பரிமாற்றம்

அன்பொழுகும் சிவகுமரன்
அயராது இழுத்து வந்த
சமத்துவ சமுதாய
இலக்கியத்தின் தேரோட்டம்

உள்ளூர வாழ்த்துகிறேன்.
நில்லாமல் பயணிக்க !

அன்புடன்
சேவியர்



BCN TRAVELS
Consulting Network.ug
inh.Rasan.Sivalingam
Canada visa, India one year, 5 years. Visa Srilanka Visa
72 மணித்தியாலத்தில் பெற்றுத் தரப்படும்
உங்கள் விமானப் பயணங்கள் என்றும் சிறப்பு விலையில்
இங்கிலாந்து (UK) விசாக்களுக்குரிய ஒழுங்குகள் செய்து தரப்படும்
MONEY TRANSFER
Bank: conslting Network. UG
Targo bank
IBAN DE90 30020900 5330 5840 82
BIC: CMCIDEDD
bcntravels@hotmail.de
consultingnetwork@hotmail.de
Rheinische str.72-44137 Dortmund
Tel: 0231-108 763 61 | Mobile: 0163 871 43 69 | Fax: 0231 1087 6362| Web: Bcn-travels-dortmund.com




# இது காலம் எனக்களித்த வரம்




கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் அரங்கியல் கருத் தரங்கில் இடம்பெற்ற கலை நிகழ்வுகளுள் ஒன்று இது. கடந்த மாதம் இடம் பெற்றது. கூத்து அசைவிலும் இசையிலும் பாத்திர உருவாக்கம் என்னும் நிகழ்வு. இதை அளித்தவர்கள் யாழ்ப்பாணம் ஆரோஹணா அரங்கக் கல்லூரியினர்.

இது இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தது. இரண்டாவது பகுதி கூத்தின் சாயல் கொண்டு ஓர் ஓரங்க நாடகம் பீஸ்ம பிரதிக்ஞை பிரதியை நான் எழுதிகொடுத்தேன்.

என்னையே பீஸ்மபாத்திரம் ஏற்கும்படி கேட்டுகொண்டதோடு எனக்கான ஒப்பனைகளையும் செய்து விட்டான் அயூரன். அதற்கான அனைத்தையும் அவன் கொண்டு வந்திருந்தான். அவன் கை வண்ணம் அன்று கண்டேன் மாணவரோடு சேர்ந்து நடிப்பது மஹா இன்பம். அதனை நான் நீண்ட நாட்களின் பின் அன்று அனுப வித்தேன். இது ஓர் வாசிப்பு அரங்காக அரங்கியல் அம்சங்களுடன் இடம் பெற்றது.



தன் தொடை மீது வைத்து,பாலூட்டி, தனு வித்தையூட்டி, அர்ஜ௳னனையும் பாண்டவ கௌரவர்களையும் வளர்த்தவர் தாத்தா பீஷ்மர்.

தன்னோடு பதினாறம் நாள் மஹ பாரதப் போரில் தன்னோடு மோத வரும் அர்ஜ௳னப் பேரப் பிள்ளையை எதிர் பார்த்து நிற்கும்தருணம் அது. பெருமூச்சோடு அவர் தன் கடந்த காலங்களை நினைவு கூருகிறார். கடந்த காலதன் உணர்வுகளை கூறியபடி தன்னை விமர்சனமும் செய்தபடி யுத்தத்துக்கு ஆயத்தமாகின்றார்.

விடேன்.என் கரமும் தனுசும் நான் இறக்கும் வரை எதிரிகளைத் தடுத்துக் கொண்டே இருக்கும். வாருங்கள் மோதுங்கள்! கனத்த மனதோடு யுத்தத்தை எதிர்கொள்கிறேன். தர்ம யுத்தம் எனக்குப் புதியதல்ல.

யுத்த பேரிகை முழங்குகிறது.யுத்த சங்கநாதம் கேட்கிறது. கையிலே தனு தாங்கி படைகளை எதிர்கொண்டு கம்பீரமாக நிற்கிறார் அக்கிழவர்.

புராண இதிகாச பாத்திரங்களுடன் பீஷ்மர்.

அவரது இறப்பு அன்று நிச்சயம் என்று அவருக்கு தெரியும்.அவர் கடைசி வார்த் தைகள் இவ்வாறு ஒலிக்கின்றன. தன்னோடு இன்று அமர் புரிய வருபவனுமான அர்ஜ௳ன பேர பிள்ளையை எதிர்நோக்கி அவர் கூறுகிறார்.

எத்தனை எத்தனை வியூகங்களைக் கண்டவன் நான்.ஒன்றா இரண்டா? எண்ணில் அடங்கா எனைச் சுற்றிப் போடப்பட்ட வியூகங்களை, உடைத்து உடைத்தே வளர்ந்தவன் நானடா. வியூகம் தகர்த்தல் எனக்கொரு விளையாட்டு. நீங்கள் அதை அறியீர்.எத்தனை வியூகங்களைக் கற்பித்திருப்பேன் உங்களுக்கு, என் அனுபவத்தையே பாலாக்கி ஊட்டி வளர்த்தேனே!தீட்டிய மரத்தில் கூர் பார்க்க வந்தவரே. இது குரு வம்சத்திற்காகத் தூக்கிய தனுசடா. அவ்வம்சம் காக்கப் பிரதிக்ஞை எடுத்துள்ளேன்.

அது பீஸ்ம பிரதிக்ஞை! நான் இருக்கும் வரை குரு வம்சத்தை அழிய

**01.மாரியம்மாளோடு பீஷ்மர்**
**02.மண்டோதரியோடு பீஷ்மர்**
**03.இராவணோடு பீஷ்மர்**
**04.இந்ரஜித்தோடு பீஷ்மர்**

மாணவர்களோடு நடிப்பது மகா இன்பம்.இவர்கள் அனைவரும் 20 வயதுக்கு உட்பட்டவர்கள் எனக்கோ அவர்கள விட நான்கு மடங்கு வயது அதிகம். இது காலம் எனக்களித்த வரம்.



பேராசிரியர்
**சி.மௌனகுரு**
(இலங்கை)

டொட்மண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்

சனிக்கிழமை 15.00- 18.00
திரையிசை நடனம்
(Cinimatic Dance)

வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag

தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3

தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
வெள்ளிக்கிழமை 16:00–17:45 Free
அ ஆ இ ஈ உ
சிறார்களுக்கும்,இளையோர்களுக்கும்,
எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche, die sich mit der tamilische Sprache nicht auskennen

கீபோர்ட் (Keyboard)
வெள்ளிக்கிழமை 18:00–19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில் இருந்து பெரியோர்கள் வரை இணைந்து கொள்ளலாபம்
Für Kinder und Jungendliche und Erwachsene!
6€ Pro Stunde



யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)
ICH LERNE DEUTSCH
6€ Pro Stunde
வெள்ளிக்கிழமை 17.45 –19.15
யேர்மன் மொழியில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படும்
யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு பயன் உள்ளதாக அமையும்

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# எங்கட ஆச்சி

03

காரைக்கவி கந்தையா பத்மானந்தன்



எங்கட ஆச்சி முந்தி ஆம்பிளைப் பிள்ளையோ பொம்பிளைப் பிள்ளையோ மூண்டு விசயம் கட்டாயம் தெரிய வேணும் எண்டு நெடுகவும் சொல்லுவா. அந்த மூண்டு விசயமும் என்னண்டால் சமைக்கிறது சயிக்கிள் ஓடுறது மற்றது நீந்திறது. இந்த மூண்டு விசயமும் ஒரு ஆளுக்குத் தெரிஞ்சா எவரும் எங்கையும் எந்தச் சந்தர்ப்பத்திலும் மற்றவையில தங்கி இருக்காமல் சீவிக்கலாம் எண்டுவா. அது மட்டும் இல்லை ஒருத்தன் உந்த மூண்டையும் செய்வான் எண்டால் அவன்ரை உடம்பும் மனசும் நல்லா இருக்கும். அவனும் அவனைச் சுத்தி இருக்கிறவையும் சந்தோசமாக இருப்பினம் எண்டுவா.

எங்கட ஊரில நாங்கள் கிணத்து தண்ணியைத்தான் நம்பி இருக்கிறனாங்கள். அதிலும் மாரி காலத்தில கிணறு தளந்தட்டிக் கொண்டு நிக்கும். தண்ணி அள்ளேக்கை தப்பித்தவறி ஆரும் கிணத்துக்கை விழுந்தால் அவருக்கு நீந்தத் தெரிஞ்சாத் தப்பலாம். இல்லாட்டில் நீந்தத் தெரிஞ்சவர் ஆரும் அந்த வீட்டில இருந்தாக் குதிச்சு விழுந்த ஆளைக் காப்பாத்தலாம். இப்பிடி ஒருத்தருக்கும் நீந்தத் தெரியாட்டில் உதவி கேட்டு கத்திக் குழற வேணும். ஆரும் வரேல்லை எண்டால் அந்தச் சீவன் அநியாயமாப் போய்ச் சேத்திடும்.சில இடங்களில நீந்தத் தெரியாட்டிலும் காப்பாத்த வேணும் எண்டு குதிச்சு அநியாயமாய்ப் போய்ச் சேர்ந்த சீவன்கள் எத்தினையோ. நீந்தத் தெரியாம ஆத்தில குளத்தில கடலில அநியாயமாப் போச்சேர்ந்த எத்தனையோ சம்பவங்களை நாங்கள் அடிக்கடி கேள்விப்படுறம். உதாலதான் எங்கட ஆச்சி நீச்சல் கட்டாயம் தெரிய வேணும் எண்டிறவ.

மற்றது சயிக்கிள் ஓட்டம் முக்கியம் எண்டிறவ. முந்தி எங்கட ஊரில இப்ப மாதிரி அடிக்கடி பஸ் ஓடுறேல்லை. கோயில் குளத்துக்கு ஆசுப்பத்திரிக்கு கடைகண்ணிக்கு போறதுக்கு நாங்கள் சயிக்கிள்தான் பாவிச்சனாங்கள். சயிக்கிள் இருந்தா ஓடத் தெரிஞ்சா பஸ்ஸ/க்கு அதுக்கு இதுக்கெண்டு காத்துக்கொண்டு காசையும் நேரத்தையும் கரியாக்கத் தேவையில்லை எண்டு ஆச்சி சொல்லுவா.முந்தி சண்டை நடக்கேக்கை இடம்பெயர்ந்து சீவிக்கேக்கை கனபேருக்கு சயிக்கிள்தான் அவையின்ரை சீவியத்துக்கு உயிர் வாழுறதுக்கு கை குடுத்தது. முந்தி நாங்கள் யாழ்ப்பாணக் கம்பசில படிக்கேக்கை அப்ப இந்தியன் ஆமி வேலிவளியை நிண்ட காலம் நாங்கள் ஒவ்வொரு நாளும் சயிக்கிளிலைதான் போய்வாறனாங்கள். எங்கட ஊருக்கும் தின்னவேலிக்கும் போய்வர கிட்டத்தட்ட நாப்பது கிலோமீற்றர் வரும் . வன்னியில் இருந்த காலத்தில் சயிக்கிளில் போய்வராத ஊரே கிடையாது. ஆச்சி அப்ப பேசி ஏசி எனக்கு சயிக்கிள் ஓடப்பழக்கினதால நான் தப்பிப் பிழைச்சனான் எண்டுதான் சொல்லுவன். இப்ப நான் எங்கயும் போகச் சயிக்கிளை எடுத்தா வீட்டம்மா உங்களுக்கு என்ன விசரே ஆரும் என்ன நினைப்பினம் எண்டுவா. அவவிலையும் பிழையில்லை சயிக்கிளிலை வேலைக்குப் போனால் அங்கை இஞ்சை போனால் கவுரக்குறைச்சல் எண்டு நினைக்கிற கனபேர் இருக்கினம்.



ஆச்சி சொல்லுற மற்ற விசயம் சமையல். அதைப் பற்றி கதைக்கத்தான் வெளிக்கிட்டனான். சமை எண்டால் பக்குவப்படல் எண்டு அகராதி சொல்லுது. அதாலதான் நாங்கள் சாமத்தியப்பட்ட பிள்ளையளை பக்குவப்பட்டிட்டினம் எண்டிறனாங்கள். அப்ப சமையல் எண்டாலும் பக்குவப்படுத்தல் எண்டு அர்த்தம் எடுக்கலாம். என்னத்தை பக்குவப்படுத்திறது எண்டால் சாப்பாட்டின்ரை சுவை மணம் நிறம் சத்துக்களைப் பக்குவப்படுத்திறது எண்டு பொருள்.

உது கனபேருக்கு விளங்கிறேல்லை எப்பிடி எண்டான்ன அவிச்சுக் கொட்டினாச் சரி எண்டு நினைப்பினம். உதாலதான் உங்கை எத்தனையோ வீடுகளிலை சண்டை சச்சரவு வந்து அடிபட்டு ஏன் கனக்கப் போவான் நேற்று ஒரு இடத்தில கொலையிலை கூட முடிஞ்சிருக்கு எண்டு ஒரு செய்தி பாத்தனான்.சமையல் மனிசன்ரை கூர்ப்பில முக்கியமான ஒரு விசயம் எண்டு ஆராய்ச்சி செய்தவை சொல்லுகினம். அப்ப ஒழுங்காச் சமைக்கத் தெரியாதவையை கூர்ப்படையாதவை எண்டாலாமோ எண்டு நீங்கள் முணுமுணுக்கிறது எனக்கு கேக்குது. உண்மையா ஒழுங்கா சமைக்கத் தெரியேல்லை எண்டால் கூர்ப்படையேல்லை எண்டுதான் சொல்ல வேணும். நெருப்பைக் கண்டு பிடிக்கேக்கையே மனுசன் சமைக்கப்பழகிப்போட்டான் எண்டு அப்பு சொல்லுறவர். இப்ப என்னண்டால் நெருப்பில்லாமலே அவிக்காம பொரிக்காம சமைக்கிற முறையள் கனக்க வந்திட்டுது.



உங்கை இப்பவும் கனபேர் ஐயோ என்ரை பிள்ளைக்கு சுடுதண்ணி கூட வைக்கத்தெரியாது எண்டு பெருமையாச் சொல்லுவினம். உப்பிடிப் பெருமை பேசுறவைக்கு நல்லா சுடுதண்ணியை கொதிக்க கொதிக்க மூஞ்சையில ஊத்தவேணும் எண்டுவா ஆச்சி, பெரிய அவுறுகம் விடுவினம். உப்பிடி வீண் விசும்பு விட்டு வளத்ததுகள்தான் போற போற இடங்களில குடும்பம் நடத்தத் தெரியாம குழம்பித் தெருவில நிக்குதுகள் எண்டுவா.சிலர் நினைப்பினம் ரெக்ஸவேயில எடுத்துச் சாப்பிடலாம் இல்லாட்டில் ஹோட்டலிலை போய்ச்சாப்பிடலாம் என்னத்துக்குச் சமைச்சுக் கஸ்ரப்பட வேணும் என்னத்துக்கு சட்டி பெட்டி கழுவ வேணும் எண்டு நினைப்பினம். உப்பிடி நினைச்சு கடைவழியை அவன் தாறதை எடுத்துத் திண்டவை அதை ஒரு நாகரீகம் எண்டு நினைச்சவை பிறகு கண்ட கிண்ட வருத்தமும் வந்து பிறகு ஒண்டுமே தின்னேலாமல் உத்தரிக்கிறதை நாங்கள் எத்தனையோ இடங்களில பாக்கிறம்.

ஆச்சி சொன்ன மாதிரி சமைக்கத் தெரிஞ்சா எங்களுக்கு விரும்பினதை விரும்பின நேரத்தில சமைச்சுச் சாப்பிடலாம். அதால செலவும் சிக்கனமாகும் உடம்பும் கண்ட கிண்ட வருத்தம் ஒண்டும் வராமல் இருக்கும். உங்கை சமைக்கத் தெரியாத ஆக்கள் லொக்டவுண் நேரத்தில எவ்வளவு கஸரப்படுகினம்.வெளிநாடு வழியை போன எங்கட பெடியள் கனபேர் சமைக்கத் தெரிஞ்சதால தப்பிப் பிழைச்சவங்கள். பிறகு வடிவு மட்டும் பாத்து சமைக்கத் தெரியாத பொம்பிளையளைக் கூப்பிட்டு இப்பவும் சமைச்சுக் குடுத்து குடும்பம் நடத்திறாங்கள் எண்டு என்ரை கூட்டாளி ஒருத்தன் பகிடியாச் சொல்லுறவன்.

உது மாதிரி கண்டபடி எக்கச்சக்கமாச் சீதனம் குடுத்து கட்டின கன பொம்பிளையள் என்ன என்ரை அப்பன் ஆத்தை இவ்வளவு சீதன பாதனத்தை தந்தது உங்களுக்குச் சமைச்சுப் போடவே எண்டு சண்டை போடுவினம். அப்பிடியான இடங்களில சமைக்கத் தெரிஞ்ச ஆம்பிளையள் ஒரு மாதிரி சமைச்சுக் கிமைச்சு குடும்ப வண்டில மூச்சு முட்ட இழுத்து ஓடுறாங்கள்.எங்கட ஒரு வெள்ளைக்காறக் கொம்பனியில வேலை செய்யிற என்ரை சிநேகிதி ஒருத்தி ஆம்பிளையளும் பொம்பிளையளும் சமமெல்லே. அப்ப சேர்ந்தெல்லோ சமைக்க வேணும். அதென்ன அடுப்பூதிறது பொம்பிளையளின்ரை வேலை எண்ட மாதிரி கன ஆம்பிளையள் நினைக்கினம் எண்டுவா. அவ சொல்லுறது உண்மை தான் அதனாலதான் ஆச்சி சொல்லுறவ ஆம்பிளையோ பொம்பிளையோ சமைக்கத் தெரிய வேணும் எண்டு. உண்மையில ஆணும் பெண்ணும் சேர்ந்து சமைச்சா அலுப்பிருக்காது எண்டிறன்.

ஆனாலும் ஒரு விசயத்தை ஒத்துக் கொள்ள வேணும். அநேகமா எங்க எந்த இடத்திலையும் எந்தக் ஹோட்டலில பாத்தாலும் சமையல்காறர் ஆம்பிளையளாத்தான் இருப்பினம். அவை சமைச்சுக் குடுக்கிறதை பெண்டுகள் சாப்பிட்டுப் போட்டு ஆஹா ஓஹோ எண்டு போட்டு தங்கட வீட்டு ஆம்பிளையளைப் பாத்து நீங்களும் இருக்கிறியளே எண்டு கருத்துச் சொல்லுவினம். அதாலதான் நல்ல சமையலை நளபாகம் எண்டு ஆக்கள் சொல்லுவினம்....

நளனின்ரை சமையலிலை தமயந்தி மட்டும் இல்லை நாடே கட்டுப்பட்டுக் கிடந்தது எண்டு ஆச்சி சொல்லுறவ. முந்தி நான் படிப்பிக்கிற காலத்தில பள்ளிக்கூட நிகழ்வுகளுக்கு சமைக்கேக்கை ரீச்சர்மார் கறி கூட்ட என்னைத்தான் கூப்பிடுறவை.

கொஞ்சம் பொறுங்கோ... நேரம் எல்லே போகுது இன்னும் உலை வைக்காம உங்கை என்னத்தை எழுதிக்கிளிக்கிறியள் எண்டு வீட்டம்மா கத்துறா . சமைச்சு முடிய பிறகு மிச்சத்தை எழுதிறன். சோறு முக்கியம் கண்டியளோ.

NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை
Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம்.
இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுகளையும் தயாரித்து வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!
உணவு விநியோகம் பரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிட்டுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளோம்.
தொடர்புகளுக்கு: 0173-7424955
0211-7691974
www.Nandys.de | email: info@nandys.de



நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்
Jaffna Bazar Jewellery
தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்
2025 ஆம் ஆண்டின் புதிய வரவு!
புத்தம் புது அழகிய டிசைன்களில் தங்க நகைகள்
பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்
திருத்த வேலைகள் குறுகிய காலத்துக்குள் செய்து தரப்படும்
Branch:
Jaffna basar.
Taunus Str 31,
60329 Frankfurt Main
ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு
உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்
ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு
பசுமையான மரக்கறி வகைகள் கடல் உணவு வகைகள் அனைத்தும் எம்மிடம் தரமாக மலிவாகக்கிடைக்கும்
Jaffna Bazar
Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

நவீனன்
(அவுஸ்திரேலியா)



# சர்வதேச அங்கீகாரம் பெறும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை!

கனடா பிரம்ப்டனில் தமிழர் இனப்படுகொலை நினைவுச் சின்னம் திறக்கப்பட்ட வரலாற்று நிகழ்வு கடந்த வாரம் மே பத்தாம் நாள் இடம்பெற்றிருந்தது.

## கனடா பிரம்ப்டன் நினைவுத்தூபி:

**இனப்படுகொலை நடைபெறவில்லை என மறுப்பவர்களுக்கு கனடாவில் இடமில்லை!**

தமிழர் இனப்படுகொலை நினைவுத் தூபி, நீதிக்கும் உண்மைக்கும் தமிழர்கள் மேற்கொள்ளும் தொடர்ச்சியான பயணத்தின் உறுதியான அடையாளமாக அமைந்ததை காணக் கூடியதாக உள்ளது. அத்துடன் தமிழர் இனப்படுகொலை நடைபெறவில்லை என மறுப்பவர்களுக்கு கனடாவில் இடமில்லை என பிரம்டன் மேயர் மேலும் தெரிவித்துள்ளார். கனடா பிரம்டனில் நினைவுத்தூபி திறக்கப்பட்டுள்ளமை எங்கள் கூட்டு வரலாற்றில் முக்கியமான ஒரு தருணமாகும் என கனடாவின் நீதியமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி அவர்களும் தெரிவித்திருந்தார்.





தமிழீழத்தில் யுத்தத்தில் உயிரிழந்த பல்லாயிரக்கணக்கான தமிழீழ மக்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள இந்த நிலைவாலயம், கனடா அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் இந்த தூபி அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. உலகம் முழுவதும் தமிழர்களுக்கான நினைவேந்தலின் மாதமாக அமைந்துள்ள மே மாதத்தை முன்னிட்டு இந்த நினைவுச்சின்னம் நீதிக்கும், உண்மைக்கும், தமிழர்கள் மேற்கொள்ளும் தொடர்ச்சியான பயணத்தின் உறுதியான அடையாளமாக அமைந்துள்ளது.

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா சாட்சியம்:

இனஅழிப்பு போரை முன்னெடுத்த ஒரு முன்னாள் தலைவரே, அதனை ஏற்றுக் கொள்வதானது சர்வதேச அளவில், ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதொரு முக்கிய சாட்சியமாகவே இருக்கும். முப்பது ஆண்டுகளாக நடந்த ஈழப்போரை, சந்திரிகா குமாரதுங்க “இனப்படுகொலைப் போர்“ (genocide war) என்று அடையாளப்படுத்தியிருப்பது முக்கியமானதொரு விடயம். அப்படி குறிப்பிடுகின்ற, இனப்படு கொலைப் போரை அவர் அந்தக் காலகட்டத்தில் வழிநடத்தியிருக்கிறார் என்பதும் உண்மையே.



முன்னாள் ஜனாதி பதி சந்திரிகா, இனப்படு கொலைப் போர் நடந்ததாக குறிப்பிடும், முப்பது ஆண்டுக ளில், 1994 தொடக்கம், 2005 வரையான 9 ஆண்டுகள் நாட்டின் ஜனாதிபதியாக இருந்திருக்கிறார்.

கடந்த 2022 18ஆம் திகதி போரில் உயிரிழந்தவர்களுக்காக தனது இல்லத்தில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்திய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஈழத்தில் முன்னெடுக்கப்பட்ட போர் இனப்படுகொலைப் போர் என்பதை வெளிப்படுத்தியிருக்கிறார்.

சந்திரிகா குமாரதுங்க தனது முகநூல் பக்கத்தில், “ஒரு நாட்டையோ மனித இனத்தையோ போரினாலோ, வெற்றியாலோ தோற்கடிக்க முடியாது என்றும், முப்பது வருட இனப்படுகொலைப் போரில், நாம் இழந்தவை ஏராளம்” என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் தான், தமிழர்களுக்கு எதிரான போர் முழுவேகம் பெற்றது. தனது ஆட்சியிலேயே 75 சதவீதமான போரை முடிவுக்குக் கொண்டு வந்து விட்டதாகவும், எஞ்சிய 25 சதவீதமான போரையே மஹிந்த ராஜபக்ஷ முடிவுக்குக் கொண்டு வந்தார் என்றும் சந்திரிகா சில ஆண்டுகளுக்கு முன்னர், கூறியிருந்தமை நினைவிருக்கலாம்.

இனஅழிப்புப் போர் – முக்கிய சாட்சியம்:

அண்மைக் காலத்தில் சந்திரிகா குமாரதுங்க நல்லிணக்கம் தொடர்பான கருத்துக்களை வெளிப்படுத்தி வந்தாலும், இனப்படுகொலைப் போரில் அவரும் இழப்புக்களைச் சந்தித்திருந்தாலும், அவரை விட மோசமான இழப்புக்களையும், அழிவுகளையும் தமிழர்கள் சந்தித்திருக்கிறார்கள்.

அதனை அவர் ஏற்றுக் கொண்டுள்ளதால் தான், அவர் தனது இல்லத்தில் 2022மே 18 நாளை நினைவு கூர்ந்திருக்கிறார். நடந்தது இனப்படுகொலைப் போர் என்ற அவரது பதிவு, இன்றைய நிலையில் இனஅழிப்புப் போர் என்பதற்கு முக்கியமானதொரு சாட்சியம்.

2009 மே 19ஆம் திகதி இனப்படுகொலை மூலம், தமிழர்களின் ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. ராஜபக்ஷ அரசாங்கம், சர்வதேச ஆதரவுடன்

18 ஆம் பக்கம் பார்க்க...



# வார்த்தை தவறிவிட்டாய் கண்ணம்மா



செவ்விது செவ்விது காதல் எனச் செந்தமிழ் தேனுறு கருத்தினால் காதல் கருவிற்கு கற்பகத் தருவானவன் பாரதி பஞ்ச பூதங்களில் மேலானதாய்க் காற்றினைக் கருதும் என் கற்பனைச் சிறகுகள் காதலைக் காற்றிற்கு ஒப்பிடத் துடிக்கிறது. மெல்லத் தீண்ட மேனி சிலிர்க்கும் காட்சிக்கு அப்பாலான உருவற்ற உணர்வு காற்றும் காதலும்

> **“தீர்த்தக் கரையினிலே” தெற்கு மூலையில்**
> **செண்பகத் தோட்டத்திலே**
> **பார்த்திருந்தால் வருவேன் –**
> **வெண்ணிலாவிலே**
> **பாங்கியோ டென்று சொன்னாய்”**

கண்ணிற்கு எட்டிடாது கண்ணாம் பூச்சியாடி களவாடவல்ல காற்று செண்பகத் தோட்டத்து நறுமலர்களின் மதன வாசனையை நாசிக்குள் ஊசி போல் ஏற்றும் நாரத முனியோ? தென்றலோடு தீப்பொறியான மலர்வாசனை, சுட்டெரித்த உள்நாட்டுக் கலவரத்திற்கு, மேலும் விஷமாக்க இராத்திரி இருள் சேனைப்படையாகிறது. இரவின் விலாசத்தை உறுதி பகர்க்கும் இரு சொற்களாய் வெண்ணிலாவிலே, தெற்கு மூலையிலே எனக் கவி தீட்டியுள்ளான். கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிய நிலவின் நளின பயணத்தில் தெற்கு ஓர் அர்த்த ஜாமமாய் கூடக் கருதலாம்.

> **“மோனத் திருக்குதடி – இந்த வையகம்**
> **மூழ்கித் துயிலினிலே‘**
> **மேலும் இதற்கு சான்று சேர்க்கிறார்**
> **நிசியின் நிசப்தத்திற்கு**

காற்றைத் தொட்டு, விண்ணைக் கண்டு, மண் மீதுலவும் பாரதி நீரோடு இணையும் வகையில் தீர்த்தக் கரையினிலே என்றும் நெருப்போடு நெகிழும் வனப்பில் மேனி கொதிக்குதடி என்றும் கூறுகிறார். பஞ்ச பூதங்களின் பங்கு நம் உள்ளும் புறமும் நின்றாட, உள்ளும் புறமும் உள்ளதெல்லாம் ஒன்றாகிப் பாயும் வெள்ளமாய் நிரம்பும் காதலிற்கும், வெறிப்புறத்தான பஞ்சபூதங்கள் காதலுணர்விற்குத் தூண்டும் கருவியாக ஐம்பொறிகளிடத்து ஐம்பூதத் தாக்கம் நிகழும். கூடிக் கலந்துலவும் வேளை ஸ்நேகம் தரும் இயற்கை, விட்டுப் பிரிந்துழலும் போது எதிரியாகிறது.

அவ்வாறாக இயற்கையின் இன்பமடியில் எங்கு காணினும் என்னையே பார்த்திருப்பாய், நான் மட்டும் வந்தால் கனவென்று கருதிடுவாய். ஆதலால் நான் கனவாய் கானல் காட்சியாய் வரவில்லை நிஜமாய் வந்துள்ளேன் என்று ஊர்ஜிதப்படுத்தி என் மாயக் கண்ணிற்கு விளக்கம் தர தோழியோடு (பாங்கி) வருவேன் என்றாள்.



> **“வார்த்தை தவறி விட்டாய் –**
> **அடி கண்ணம்மா**
> **மார்பு துடிக்கு தடீ!**
> **பார்த்த விடத்திலெல்லாம் –**
> **உன்னைப் போலவே**
> **பாவை தெரியுதடீ!**

வார்த்தை தவறிவிட்டாய், ஆனால் நீயோ அங்கு வரவில்லை. வீரத்தமிழ் பேசி பொய்யுரையாத பெரும் தெய்வம் நீ வாராது போகும் வண்ணம் எவ்வாறான துன்பம் உனக்கு நேர்ந்ததோ என்றெண்ணி என் மார்பு துடிக்குதடி என்கின்றான். உடல் வலியும், மனக்கலியும் என் இரு கண்களில் பட்டுத் தெறிக்கப் பார்த்த இடத்தில் எல்லாம் கண்ணம்மாவின் உரு தெரியும் மயக்க நிலை உணர்கின்றான்.

கண்ணம்மாவின் நினைவு மதுவில் தோய்ந்த காதலனை காமன் தன் விரகக் கணையால் தாக்க மன்மத மலராளி மேலும் மையல் வளர்த்து தலை சுற்றி மேனி கொதிக்கும் அனலாகிறது.

> **“மேனி கொதிக்குதடி” தலை சுற்றியே**
> **வேதனை செய்குதடி!**
> **வானில் இடத்தையெல்லாம் – இந்த**
> **வெண்ணிலா**
> **வந்து தழுவுது பார்!**

விண்ணையும் மண்ணையும் ஏக சுகமாய் சுகிர்க்கும் பாரதி இயற்கைச் செருக்கில் ஆண், பெண் தன்மை தேடும் அதியுன்னத ரசனைக் கலை நாடுகிறான். கரு வண்ணவான மகனை, வெண்ணிலாப் பெண் தழுவி, இருள் கிண்ணத்துள் ஒளிமது நிரப்புகிறான். அது போல உனைக் காணாது இருளான கரு வான மொத்த என் மன வெளியில், தூய்மைச் சுடரனைய வெண்ணிலா போல் நின் நினைவொளி தழுவிப் படர்ந்து நீள்கிறது என்கிறான்.

உணர்ச்சிக் கொதிப்பை வார்த்தைகளுக்குள் ஊற்றி மொழியாழம் கொண்டு மெய்யாளும் கவிஞன் மேலும் தொடர்கிறானர். எந்நேரமும் மையல் தரும் நின் நினைவில் துவழும் நான் உன் தீண்டலைப் பிரிந்த இந்நிலை நரகத்துழலுவதாகிறது என்கிறார்.

> **“கடுமை யுடையதடீ! ஏந்த நேரமும்**
> **காவலுன் மாளிகையில்**
> **அடிமை புகந்த பின்னும் – எண்ணும்**
> **போது நான்**
> **அங்கு வருவதற்கில்லை”**

நீ வசிக்கும் மனை எனவும் பொருள்படும் அவ்வேளை நின் மனம் எனும் மாளிகை என்றும் எண்ணலாம். அகத்திடை ஆச்சார வழக்கங்களை கட்டி வைத்துள்ளாய் அது பெரும் காவல் அமைகிறதோ?

நின்னிடத்தே சரண் புகந்து அடிமையான பின் கூட எண்ணும் போது அவ்விடத்தே நான் வரமுடியவில்லையே என வருந்துகிறான். காதலிக்கு சேவகனாய், அடிமையாய், காதலைப் பணிந்து கொண்டாடும் பாங்கு பாரதியின் அதியுன்னத அறிவு, தன்னை முற்றாக இழந்து தாம் எனும் தன்மை மறக்கும் நிட்சய யோக மார்க்கமாய் அமைக்கிறான் அவன் காதலை அவ்வண்ணம் காதலி எண்ணுவதையெல்லாம் ஓர் அடிமை போல் இருந்து அன்பினால் கட்டியாளும் வண்ணம் உன்னுள் நான் புகுந்த பின்பு கூட நீ எனை எண்ணும் வேளை அங்கு நான் வாராது நிற்கிறேனே. உனக்கு வேண்டும் என்பதை பூர்த்தி செய்ய முடியாது பாவியாகிறேனே என வருந்துகிறான். சமுதாய வழக்கங்களை எண்ணி சற்று கொதிக்கிறான். ஆன்மாக்களை அடக்கி ஆள எண்ணம் கொண்ட சமூக காவல்களை பொறுக்கவில்லை எனகிறான். எப்பிழையும் செய்யாத உத்தம அரசி அவள். எதற்கு வெட்கி வருந்த வேண்டும். இத்தடைகளை உடைத்தெறியும் அதிகாரம் உள்ளவள் என்கிறார். “நடுமையரசியவள் எதற்காகவோ நாணிக் குலைந்திடுவாள்”

தம் நிலையறிந்த பாரதி அத்தனை அழகாய் உள்ளக்கிடக்கையை மொழி பெயர்க்கிறார்.

> **கூடிப் பிரியாமலே ஓரிரவெலாம்**
> **கொஞ்சிக் குலவியங்கே**
> **ஆடி விளையாடியே உன்றன் மேனியை**
> **ஆயிரங்கோடி முறை**
> **நாடித் தழுவி மனக் குறை தீர்த்து நான்**
> **நல்ல களி யெய்தியே**
> **பாடிப் பரவசமாய் – நிற்கவே தவம்**
> **பண்ணிய தில்லையடி!**

ஆரத்தழுவுதல் அமர நிலை யென்றறிந்து தந்த பாரதியின் மொழி வரமே நம் தவமாகட்டும்!

கண்ணம்மா! நின்னைக்கூடவேண்டும். அதுவும் பிரயாமல் கூடவேண்டும். முச்சுக் காற்றுகளின் பரிமாற்ற இடவெளியில் ஓர் இரவு முழுவதுமாய் உன்னை முத்தமிட்டு, முத்தமிட்டு, முத்தமிட்டு காவியம்போல் நாம் அன்பு மொழிபேசவேண்டும். ஆறுமணி நேரத்தில் ஆயிரம்கோடிமுறை தழுவ வேண்டும். அதுவும் சரச விளையாடல்கள் புரிந்து நானே நாடித் தழுவ வேண்டும். (பாரதியின் காதலில் உள்ள கனிவு, அகங்காரம் அழித்த அன்பின் தன்மை, இவற்றிற்கு நாடி தழுவுதல் என்னும் சொல்லழகு தருகின்கிறது.

இதய சந்தங்கள் இணையும் வண்ணம் உன்னைத் தழுவின் என் மனதுள் கட்டுண்ட குறை, கவலை, தீரும். இதயக்கனம் அகலும். இவ்வாறான அத்தனை செயல்களும் நல்ல களி எய்திக்கவல்லன. (எக்கணம் நினைக்கும் போதும் பேரானந்தம் தரவல்லன. எவ்வித சலன அன்பும் அற்றது என்பதாய் நல் களி என்கிறார்.)

எல்லையற்ற அந்த ஆனந்தத்தின வெளிப்பாடே இசையாய் பரவச விசையாய் அமையும். இவ்வாறெல்லாம் வேண்டுவன பெற நான் எப்பிறவியிலும் தவம் பண்ணி இருக்கவில்லையே! ஆடடா! என் அதிஷ்டமும், புண்ணியமும் இவ்வளவுதானோ?

உன் பேரானந்த நிலை முன்னமே தெரிந்திருந்தால், உன்னைப் பெறவேண்டி எத்தனை ஜென்மம் வேண்டுமாயினும் தவம் பண்ணியிருப்பேனோ? எனக் கண்ணம்மாவின் மகிமை உணர்ந்து மனது சலிக்கிறார் மகாகவி.

ஆரத்தழுவுதல் அமரநிலையென்று, அறிந்து தந்த பாரதியின் மொழிவரமே நம் தவமாகட்டும்.



கலாசூரி
திவ்யா சுஜேன்
(இலங்கை)



# தனிநிலை வாழ்க்கையில் சந்திக்க வேண்டிய சில சவால்கள்




**மே மாத தொடர்ச்சி...**

முந்தைய காலங்களில், திருமணக் கட்டமைப்புகள் பெண்களுக்கே அதிகமான உளவியல் மற்றும் வீட்டுப் பொறுப்புகளைத் திணித்தது. இன்று, பெண்கள் சமரசங்களை விடச் சுதந்திரத்தை விரும்புகிறார்கள். மேலும் மருத்துவ முன்னேற்றங்கள், குழந்தைப்பேற்றுக்கான வாய்ப்புகளை வெவ்வேறு வழிகளில் அதிகரிக்கச் செய்துவிட்டது. பொருளாதார ரீதியாகப் பெண்கள் தனித்து இயங்க வாய்ப்புகள் அதிரித்துவிட்டன. எனவே சில பெண்கள் குழந்தைகளிடம் பெற்றுக்கொள்வதற்குத் திருமணம் மற்றும் உறவுகள் அவசியம் இல்லை என்ற கருத்து குறைந்து வருகிறது. முற்காலத்தில், உறவுகள் என்பது பெண்களைப் பொறுத்தவரையில் வீட்டுப் பொறுப்புகள் மற்றும் குழந்தை வளர்ப்பைச் சுற்றியே இருந்தன. அதே நேரத்தில் ஆண்கள் தங்களுக்கான நேரத்தைப் பெரும்பாலும் சமூக வாழ்க்கையைத் தொடர்வதற்கே செலவழித்தனர். அதுவும் வீட்டிற்கு வெளியே தனித்துவமாக அதைப் பராமரித்து வந்தனர். எத்தனை ஆண்கள் தங்கள் சமூக வாழ்க்கை குறித்த அனுபவங்களைத் தங்கள் மனைவியுடனோ காதலியுடனோ பகிர்ந்து கொண்டார்கள் என்பது கேள்விக்குறியே.

ஆனால் பெண்கள் இன்று அரசியல், பொருளாதாரம், வாழ்க்கை முறை, பயணம், பொழுதுபோக்கு, மற்றும் தனிமனித/ சமூக விழுமியங்கள் போன்ற பல்வேறு விஷயங்களில் தங்கள் கருத்துக்களை வலுவாக வெளிப்படுத்துகிறார்கள். இதனால் உறவுகள் முன்பு போல எளிமையாக இல்லாமல், மிகவும் சிக்கலானதாக மாறியிருக்கின்றன. தங்கள் கடைகளைத் தேர்ந்தெடுக்கும்போது இவை போன்றவற்றிலும் கருத்தியல் ஒற்றுமை இருக்க வேண்டுமென நினைக்கின்றனர். பல ஆண்களால் இந்த மாற்றத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இத்தகைய பிரச்சனைகளை எதிர்கொள்வதற்குப் பதிலாக, பல பெண்கள் தங்கள் சொந்த வளர்ச்சி மற்றும் தொழில்/வேலை முன்னேற்றத்தை முன்னிலைப் படுத்துகிறார்கள். இது ஒரு விதத்தில் பல ஆண்டுக் காலமாகச் சேர்த்து வைத்த உணர்வு அழுத்தத்தினின்றும் வெளிவரும் முயற்சியின் வெளிப்பாடாகவும் இருக்கலாம்.

இன்றைய தலைமுறை ஆண்களோ இளம் வயதிலேயே தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் பொருளாதார வளர்ச்சியில் அதிகளவில் தங்கள் நேரத்தை முதலீடு செய்யப்படுகிறார்கள். தொழில்/ வேலை வளர்ச்சி பெரும்பாலும் உறவு களை விட முன்னுரிமை பெற்றிருக்கிறது. சில ஆண்கள் முற்றிலும் தனிமையான வாழ்க்கையை விரும்புகிறார்கள் என்றாலும், பெரும்பான்மையானவர்கள் ஓபன் ரிலேஷன்ஷிப்பை நாடுகிறார்கள் (பெரும்பாலும் திருமணத்தின் கட்டமைப்பிற்கு வெளியே).

இதற்கான முக்கியக் காரணங்களை ஆராய்ந்தால் திருமணம் மற்றும் விவாகரத்திலிருக்கும் சட்டச் சிக்கல்கள் மற்றும் குடும்ப வாழ்க்கையுடன் தொடர்புடைய பொருளாதார நெருக்கடியாக இருக்கின்றன. திருமணம் நீடிக்காத பட்சத்தில், விவாகரத்துடன் இணைந்து வரும் ஜீவனாம்சம், குழந்தை ஆதரவு மற்றும் பிற பொருளாதாரக் கடமைகள் என்பது தலைமுறை தலைமுறையாக ஆண்கள் மீது சுமத்தப்படும் பெருஞ்சுமைகளாகவே இருக்கின்றன. ஜீவனாம்சம் என்ற பெயரில் ஓர் ஆணின் பெரும்பான்மையான உற்பத்தி காலம் ( productive period ( carrier/family setting/ reproduction) முழுவதும் உறிஞ்சப்படுவதைப் பலர் வாழ்வில் பார்க்கிறோம். மேலும், இன்றைய ஆண்கள் பலர் ஒருதார மணம் இல்லாத (non monogamous), மன அழுத்தமில்லாத உறவுகளுக்கான தங்கள் விருப்பத்தைப் பற்றி வெளிப்படையாகவும் நேர்மையாகவும் இருக்கின்றனர். இது உறவு விதிமுறைகளின் பரந்த மாற்றத்தைப் பிரதிபலிக்கிறது (அங்கு உணர்ச்சி மற்றும் பொருளாதாரச் சுதந்திரம் பெருகிய முறையில் தனிப்பட்ட தேர்வுகள் வடிவமைக்கப்படுகிறது)







**தீபா சீறிதரன்**
**(தைவான்)**

சமீப வருடங்களில் பாலினங்கள் சார்ந்த பொறுப்புகளும் ( gender roles) பொதுவாக மாறி வருகின்றன, இது பல ஆண்களைப் பயமுறுத்துகிறது. அவர்கள் தங்கள் இணையர்கள் பொருளாதார ரீதியாக ஆதரவளிப்பதை விரும்பினாலும், இத்தனை வருடங்களாகப் பெண்களுக்கானது என முத்திரை குத்தப்பட்ட சில பொறுப்புகளையும் வேலைகளையும் மனதளவில் இன்னும் ஏற்கத் தயாராகவில்லை என்றே நினைக்கிறேன். இவை போன்ற பல காரணங்களால் இன்றைய இளைய தலைமுறையினர் தனிமை வாழ்க்கையைப் பெரிதும் விரும்புகிறார்கள். அடுத்து எல்லாவற்றையும் போலவே தனிமை வாழ்க்கையிலும் சில நன்மைகளும், சில சவால்களும் இருக்கின்றன. அவற்றைப் பற்றிக் கொஞ்சம் அலசிப் பார்க்கலாம்.

**நன்மைகள் :**

சுதந்திரம்– சமரசம் இல்லாமல் நம் வாழ்க்கை முடிவுகளையும் தேர்வுகளையும் நாம் எடுத்துக் கொள்ளலாம். தனிப்பட்ட வளர்ச்சிக்கு அதிக நேரம் – பொழுதுபோக்குகள், தொழில், பயணம் மற்றும் சுய முன்னேற்றத்தில் கவனம் செலுத்தலாம். நேர மேலாண்மையை எளிமையாகக் கையாளலாம். குறைவான உணர்ச்சி மன அழுத்தம் – உறவு மோதல்கள், முறிவுகள் அல்லது உறவுச் சிக்கல்களில் ஏற்படும் சுமைகளைத் தவிர்த்துவிடலாம்.

பொருளாதாரக் கட்டுப்பாடு – ஒரு துணைக்கான செலவுகள் இல்லாமல் நம் பணத்தை நமக்கான தேவைகள் முன்னுரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நிர்வகிக்கலாம். வலுவான நட்பு மற்றும் சமூக வாழ்க்கை – அர்த்தமுள்ள நட்புகள் மற்றும் சமூக வலைப்பின்னல்களை உருவாக்க அதிக நேரம் ஒதுக்கிக்கொள்ளலாம்.

**தனிமை வாழ்க்கையில் சந்திக்க வேண்டிய சில சவால்கள்:**

வாழ்க்கைத் துணை இல்லாதது சில நேரங்களில் மிகவும் தனிமைப்படுத்தப்பட்டதாக உணர வைக்கும். சமூக ஊடகங்களும் நண்பர்களும் உணர்ச்சித் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும் என்றாலும், துணை இல்லாமல் மனிதர்கள் இன்னும் தங்கள் பாலியல் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்துகொள்ளப் பரிணாமமடையவில்லை. கே/வல் உறவுகளில் ஈடுபட விரும்பாதவர்களுக்குப் பாலியல்பற்றாக்குறை ஒரு பெரிய சவாலாக இருக்கலாம்.

சமூக அழுத்தம்ளுகளங்கம்– சில கலாச்சாரங்களில்,தனித்து வாழ்தல் இன்னும் குற்றமாகவே விரும்பத்தகாததாகவே பார்க்கப்படுகிறது. அவர்களின் அந்தரங்க வாழ்க்கை

28 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.





நடுப்பக்கம்

சேவியர்
(தமிழ்நாடு)

# விடுமுறைகளும், விதிமுறைகளும்

# பயணங்கள் நமது ஆயுளை நீட்டிக்கும் மன அழுத்தத்தை விலக்கும்

'அவசர உலகம்' என்று தான் இன்றைய வாழ்க்கையை அழைக்க வேண்டியிருக்கிறது. அவசரமாய் எழும்பி, அவசரமாய் ஓடி, அவசரமாய் வீடு வந்து, அவசரமாய் தூங்கி, அவசரமாய் எழும்பி என வாழ்க்கை ஓடுகிறது. நின்று நிதானித்தால் ஏதோ உலகமே இடிந்து விழுவது போல எல்லாரும் பாவிக்கிறார்கள்.

ஒரு நண்பரைப் பார்த்தால் உற்சாகமாய்க் கட்டியணைத்து அரை மணி நேரம் பேச யாருக்கும் நேரம் இருப்பதில்லை. "ஹாய்... வாட் எ சர்ப்ப்ரைஸ்.." என ஒரு வார்த்தை பேசிவிட்டு. அதிக பட்சம் அவருடைய எண்ணை வாங்கி வாட்ஸப்பு வாங்குவோம். அல்லது "பேஸ்புக்ல என்ன நேம்ல இருக்கே ?" என கேட்டு வாங்கி விடைபெறுவோம்.

நமது உறவுகள் டிஜிடல் மயமாகிவிட்டன. இதயங்களின் இறுக்கத்தை இணையத்தின் இருப்பு பறித்துக் கொண்டு விட்டது. எல்லோருமே நெருக்கமாய் இருப்பது போன்ற ஒரு மாயைக்குள் சிக்கிக் கொள்ளப் பழகிவிட்டோம். நமது பிள்ளைகள் காலையில் எழும்பி போகோ சேனல் பார்த்து விட்டு, ஸ்கூல் சென்று திரும்பி டோரேமான் பார்த்து சாப்பிட்டு, ஹோம் வர்க் முடித்து ஐபேட்களில் ஐக்கியமாகி விடுகின்றனர். அவர்கள் தூங்கிய பின் தான் பாதி பெற்றோர் வீடுகளுக்கே திரும்புகிறார்கள்.

கணவன் மனைவியிடையேயான உரையாடல்களை வாழ்க்கையின் பொருளாதாரத் தேவைகள் பறித்து விட்டன. குழந்தைகளுக்கும் பெற்றோருக்கும் இடையேயான உரையாடல்களை மொபைல் ஆப்ஸ்கள் பறித்து விட்டன. இத்தகைய சூழலில் எல்லோருக்கும் தேவையான ஒரு விஷயம் விடுமுறையில் ஒரு பயணம்.

ரயில் பயணங்களில் பார்த்திருக்கிறேன். ஒரு குடும்பம் ரயிலில் பயணம் செய்யும். அப்பா ஒரு ஓரமாய் அமர்ந்து வாட்ஸப்பிக் கொண்டிருப்பார், அம்மா ஃபேஸ் புக்கிக் கொன்டிருப்பார், பிள்ளைகள் க்ளேஷ் ஆஃப் கிளான்ஸ் விளையாடிக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு இடையே இருக்க வேண்டிய சிரிப்பும், உற்சாகமும், அடித்துப் பேசி மகிழும் கணங்களும் எல்லாமே டெக்னாலஜி கருவிகளில் சமாதியாகி விடுகின்றன.

பயணங்கள் விடுமுறையின் ஒரு முக்கியமான அம்சம். அதில் செய்ய வேண்டிய மிக முக்கியமான விஷயம் எல்லா கேட்ஜெட்களையும் தூக்கி மூட்டை கட்டி வீட்டிலேயே போட்டு விட்டுக் கிளம்புவது தான். அவசரத்துக்குப் பேச ஒரு போன் கையில் இருந்தால் போதுமானது.

பயணங்கள் முதலாவது நமது குடும்பத்தினரிடையே ஒரு ஆழமான புரிதலை உருவாக்க வேண்டும். என் பையன் எவ்வளவு அழகா பேசறான் என்பதையே பல பெற்றோர்கள் இத்தகைய பயணங்களில் தான் புரிந்து கொள்கிறார்கள். மனைவியோடு மனம் விட்டுப் பேசும் தருணங்களும், குழந்தைகளோடு குழந்தையாய் புரளும் தருணங்களும் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்குகின்றன. இந்த பிணைப்பைத் தான் விடுமுறைப் பயணங்கள் தரவேண்டும்.



வாழ்க்கை என்பது வரப்போகும் நாட்களிலல்ல, கடந்து செல்லும் கணங்களில் இருக்கிறது.

பயணங்கள் நமது ஆயுளை நீட்டிக்கும் என்றும், மன அழுத்தத்தை விலக்கும் என்றும் பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. விட்டு விடுதலையாகி ஒரு சிட்டுக் குருவியைப் போல பறந்து திரியும் ஒரு ஆனந்த அனுபவத்தை அனுபவித்துப் பாருங்கள்.

வாழ்க்கை என்பது வரப்போகும் நாட்களிலல்ல, கடந்து செல்லும் கணங்களில் இருக்கிறது என்பதே வாழ்க்கையின் தத்துவம்.

விடுமுறை பயணங்கள் செல்லும் பல பெற்றோர் செய்யும் தவறு கூடவே தாங்கள் யார் எனும் அடையாளத்தையும் கூடவே தூக்கிச் சுமப்பது தான். நான் ஒரு மேனேஜர், நான் ஒரு முதலாளி, நான் ஒரு அப்பாடக்கர் போன்ற சிந்தனைகளைத் தூக்கிக் கொண்டு பயணம் செல்லாதீர்கள். உங்களுக்கு உள்ளே ஒளிந்து கிடக்கும் உங்களுடைய மழலைக்கால முகமோ, அல்லது யாருக்கும் தெரியாத உங்களுடைய ரசனை முகமோ வெளியே வரட்டும்.

"அங்கே ஓடாதே", "இங்கே போகாதே", " அது அழுக்கு அதெல்லாம் தொடாதே" எனும் தொடர் கட்டுப்பாடுகளை இட்டு விடுமுறையை கறையாக்கி

17 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# விடுமுறைகளும், விதிமுறைகளும் பயணங்கள் நமது ஆயுளை நீட்டிக்கும் மன அழுத்தத்தை விலக்கும்

விடாதீர்கள். மணல் வீடு கட்டுங்கள், அலையில் புரளுங்கள். ஆடை அழுக்காவது தான் மனது சுத்தமாவதன் அடையாளம். மனதின் கவசங்களைக் கழற்றாமல் தும்பி பிடிக்க முடியாது. விடுமுறை என்பது நீங்கள் எப்படி இருக்க வேண்டுமென நீங்கள் முடிவெடுப்பது. அடுத்தவர்களுக்காக எதையும் போலித் தனமாகச் செய்யாதீர்கள்.

“நோ எலக்ட்ரானிக் டே“

சரி, விடுமுறைக்கு பயணம் எதுவும் போக முடியவில்லை என வைத்துக் கொள்ளுங்கள். பரவாயில்லை. ஒரு நாளை முழுமையாய் “நோ எலக்ட்ரானிக் டே“ என அழைத்து குடும்பமாய் விளையாடுங்கள். லேப்டாப், போன், டேப்லெட் எல்லாமே அறைகளில் அடங்கிக் கிடக்கட்டும். அவை விரல்களால் பேசும் ஊடகங்கள். விரல்களால் பேசுவதை விட விழிகளால் பேசுவது அழகானது என்பதை உணருங்கள்.

வீட்டிலேயே ஒரு குட்டி மீட்டிங் போடுங்கள். பாடல், ஆடல், உரையாடல், பகிர்தல், விளையாடுதல் என ஏதேனும் சுவாரஸ்யமாய் செய்து கொண்டே இருங்கள். நேரத்தைப் பற்றியோ, வேறு எதைப் பற்றியோ சிந்தனையற்று இருங்கள். நீங்கள் அப்படிச் செலவு செய்யும் நேரத்தில், உறவையும் அன்பையும் மகிழ்வையும் சம்பாதிப்பீர்கள்.

கடைசியாக எப்போது உங்கள் பெற்றோரைச் சென்று பார்த்தீர்கள், அல்லது சற்றுத் தொலைவில் இருக்கும் உங்கள் சகோதரனையோ, சகோதரியையோ சென்று பார்த்தீர்கள் ? இந்த விடுமுறை அத்தகைய ஒரு வாய்ப்பை நல்கலாமே. குடும்பத்தோடு கிளம்பி உறவினர்களைச் சந்தித்து ஒரு இனிமையான அன்புப் பரிமாற்றத்தை நடத்துங்கள். அல்லது நீண்டகால நண்பன், ஒரு உறவினர் என உறவின் எல்லையை அதிகப்படுத்துங்கள்.

இன்னும் அதிக அர்த்தமுள்ளதாக இந்த விடுமுறையைக் கழிக்க வேண்டுமா ? குழந்தைகளை அழைத்துக் கொண்டு ஒரு அனாதை இல்லம் செல்லுங்கள். அங்கே உள்ள குழந்தைகளுடன் உங்கள் குழந்தைகளை விளையாட அனுமதியுங்கள். அங்கே உள்ள பெரியவர்களின் அருகே அமர்ந்து கதைகளைக் கேளுங்கள். வாழ்வின் முழுமை இத்தகைய நிகழ்வுகளில் இருக்கிறது. உங்கள் குழந்தைகள் வாழ்வின் உன்னதத்தை உணர்வார்கள். பிறரோடு நேசமாய் இருக்க வேண்டிய தன் தேவையை அறிவார்கள்.

வெளியே செல்லும் வாய்ப்பும் இல்லாத சூழல் என வைத்துக் கொள்ளுங்கள். உதாரணமாக ஒரு மழை நாள் என நினைத்துக் கொள்ளுங்கள். வீட்டுக்குள்ளேயே செய்யக் கூடிய ஒரு ஹாபியை எடுங்கள். அது ஓவியம் வரைவதாக இருந்தால் எல்லாரும் சேர்ந்து ஓவியம் வரைந்து மகிழுங்கள். அல்லது ஒரு கொலாஜ் செய்து ரசியுங்கள். என்ன செய்கிறீர்கள் என்பதல்ல முக்கியம் எப்படி இணைந்து செய்கிறீர்கள் என்பதே முக்கியம். ஓவியம் அழகாக இருப்பதல்ல முக்கியம், குடும்பம் அன்பாக இருப்பதே முக்கியம்.

இப்போதெல்லாம் வீடியோ கேமராக்கள் கையடக்க போனிலேயே ஹைடெக் முறையில் வந்து விட்டன. வீட்டுக்குள்ளேயே ஒரு குட்டி நாடகம், நடனம், பாட்டு என எதையாவது ரெக்கார்ட் செய்து மகிழலாம். அது உங்களுடைய அந்த விடுமுறையின் இனிமையை டிஜிடல் கனவாக தனக்குள் பதுக்கியும் வைத்துக் கொள்ளும்.

வீட்டில் சின்னக் குழந்தைகள் இருந் தால் நல்ல கதைகளை வாசி க் கலாம். கதைகள் சொல்ல குழந்தைகளை உற்சாகப் படுத்தலாம். ஒருவர் கதையை ஆரம்பித்து, அடுத்தவர் அதைத் தொடரும் படி பிள்ளைகளின் கற்பனை வளத்தை ஊக்குவிக்கலாம். அதெல்லாம் இல்லையேல் குறைந்தபட்சம் கேரம், சீட்டு போல எல்லாரும் உட்கார்ந்து விளையாடும் ஏதோ ஒரு விளையாட்டையேனும் விளையாடலாம்.

விட்டுக் கொடுத்தலும், பிறருடைய உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்தலும், பெரிய எதிர்பார்ப்புகள் ஏதும் இல்லாமல் இருப்பதும் விடுமுறை காலத்தில் மிக அவசியம். அதுவும் நீங்கள் வேறு குடும்பத்தினருடன் சேர்ந்து விடுமுறையைக் கொண்டாடுகிறீர்களெனில் இது நிச்சயம் தேவை.

தூக்கிச் சுமக்காதவரை எந்த சுமையும் நமக்கொரு சுமையல்ல.

விடுமுறையின் முடிவில் இனிய நினைவுகள் மட்டுமே எஞ்சியிருக்கட்டும். ஏதேனும் கசப்பு அனுபவங்கள் இருந்தால் அதை அப்படியே கைகழுவி விட்டு விடுங்கள். தூக்கிச் சுமக்காதவரை எந்த சுமையும் நமக்கொரு சுமையல்ல.

சுருக்கமாக, விடுமுறை என்பது நம்மை புதுப்பிக்கும் காலமாகவும், நமது ரசனைகளின் விளை நிலத்தில் விளையாடும் காலமாகவும், உறவுகளின் இனிமையை உணரும் காலமாகவும், மனித நேயத்தின் கிளைகள் செழிக்கும் காலமாகவும் இருக்கட்டும். விடுமுறையில் டிஜிடலுக்கு விடைகொடுங்கள், உறவுகளுக்கு உயிர் கொடுங்கள்.

# நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளுக்கு எமது அஞ்சலி



யாழ்ப்பாணம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் 01.05.2025 இரவு சித்திரை திருவாதிரை, சுக்ல பக்ஷ (வளர்பிறை) பஞ்சமித் திதியில் எதிர்பாராத வேளையில், தமது 68ஆவது அகவையில் கொழும்பில் சுவாமிகள பரிபூரணம் எய்தியுள்ளார். தம் குருநாதர் தொடங்கிய நல்லை ஆதீனத்தின் அடுத்த மகா சந்நிதானமாக தமது முப்பது நான்கு வயதில் (1981) பட்டமேற்று சுமார் 44 ஆண்டுகள் ( ஏறத்தாழ அரை நூற்றாண்டு ) மகா சந்நிதானமாகப் பணியாற்றியவர். போரும் இடப்பெயர்வுகளும் அவலங்களும் நிறைந்த போராட்டமான இக்காலத்தில் எந்த ஒரு பணபலம், பொருட்பலம், ஆட்பலமும் இன்றி ஆதீன மரபை பேணி சைவ மரபின் தூணாக விளங்கியவர்.





அரசியற் குழப்பங்கள் ஆதீனம் வரை நீளும் சூழல் வந்த போதும் மிகக் கவனமாக பக்கம் சாராமல் நடுநிலை காத்தவர். இவ்வளவுக்கும் பிறப்பு வழி குடும்ப பின்புலம், ஆழமான நவீன கல்வி பெறாத போதும் பெரும் ஆளுமையாக நின்றவர். வாழ்வின் பிற்காலத்தில் நோய் பீடித்த போதும் துவளாமல் பணி செய்தவர். இப்படி பின்புலம் ஏதும் இல்லாமல் நின்று நிலைப்பது எப்படி? என்று நான் பன்முறை எனக்குள் வியந்திருக்கிறேன். அதற்கு ஒரு பெரும் காரணமே உண்டு. அது அவரது குரு பக்தி. மற்றும் அவரது குருவான ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் ஆசீர்வாதம் தான் என்பதில் வேறு கருத்தே இல்லை.



நவீன நகரில் வாழ்ந்த துறவியான அவர் பேரில் நான் அறிந்து துறவொழுக்கம் குறித்து விமர்சனங்களும் இல்லை .இப்படி ஒரு மகான் நம்மிடையே வாழ்ந்து பரிபூரணமடைந்திருக்கிறார். சுவாமிகளுக்கு எமது அஞ்சலிகள்..

அவரை அவரது குருவின் அருள் வழி நடத்தியது போல, இன்னும் நல்லை ஆதீன மரபை அவரது அருள் வழிநடத்தட்டும்!!

**பிரார்த்தனைகளுடன்,**
**மயூரகிரிக்குருக்கள்**



# சர்வதேச அங்கீகாரம் பெறும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை!



13 ஆம் பக்கத் தொடர்ச்சி...

பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற அடையாளத்துடன் முன்னெடுத்த போர் முற்று முழுதாக தமிழர்கள் மீது ஏவிவிடப்பட்டது.

தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட போரில் தமிழரின் இருப்பையும், அடையாளங்களையும் அழிப்பதற்காக முன்னெடுக்கப்பட்டது என்பதே உண்மையாகும்.

### அவுஸ்திரேலிய மாநில பாராளுமன்ற அங்கீகாரம்:

நியூ சவுத் வேல்ஸ் நாடாளுமன்றம் இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள் என்பதை ஏகமனதாக ஏற்றுக் கொண்டு மே 18 ஆந் திகதியைத் தமிழர் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாக அங்கீகரித்துள்ளது.



இந்த மிக முக்கியமான நாளில், ஒவ்வொரு ஆண்டும் மே 18 ஆம் தேதியை தமிழ் இனப்படுகொலை நினைவு தினமாக அங்கீகரிக்கும் நியூ சவுத் வேல்ஸ் முதல் அவுஸ்திரேலிய மாநில பாராளுமன்றமாகும். 2022 மே 18ஆம் நிறைவேற்றப்பட்ட பிரேரணையானது தமிழ் சமூகத்தின் பல உறுப்பினர்களின் பல வருட கடின உழைப்பு மற்றும் வாதத்தின் உச்சகட்டத்தின் விளைவாகும்.

இலங்கைத் தீவில் அப்பாவி தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலை பல மனித உரிமை மீறல்களையும், நீதியைநாடும்சர்வதேசசமூகத்தையும்எதிர்கொள்கிறது. இந்த அட்டூழியங்களுக்குக் காரணமானவர்கள் கணக்குக் காட்டப்படுவதை உறுதிசெய்ய நிறைய வேலைகள் காத்திருக்கின்றன.

தமிழ் இனப்படுகொலை நினைவு தினத்தில், தீவில் அமைதி, நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு நாங்கள் மீண்டும் உறுதியளிக்கிறோம் என நியூ சவுத் வேல்ஸ் நாடாளுமன்றத்தில் 2022 மே 18ஆம் தேதியை தமிழர் இனப்படுகொலை நினைவு தினமாக அங்கீகரிக்கும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

### அவுஸ்திரேலியாவில் முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி:

அவுஸ்திரேலியா நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் கொண்டுவரப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானமானது, முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி தினத்தை அங்கிகரித்ததோடு இங்கு வாழும் தமிழர்கள் அவுஸ்திரேலியாவின் பல் கலாச்சார சமூகத்திற்கு ஆற்றும் பங்களிப்புகளையும் உள்ளடக்கி அமைந்துள்ளது.

18.மே.2009இல் இலங்கையின் 26 ஆண்டுகால உள்நாட்டுப் போர் முடிவின் நிறைவைக் குறிக்கிறது. இலங்கை உள்நாட்டுப் போரில் குறைந்தது 100,000 பேர் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபை மதிப்பிடுகிறது. அவுஸ்திரேலியாவில் தங்கியுள்ள பல்லாயிரக்கணக்கான தமிழ் அகதிகள் மற்றும் அவர்கள் நமது பன்முக கலாச்சார சமூகத்திற்கு செய்யும் பங்களிப்புகள் அளம்பெரியவை.

கனடா நாடாளுமன்றும் தமிழ் இனப்படுகொலைய அங்கீகரித்த உலகின் முதல் நாடு.

இலங்கையில் தமிழர்களிற்கு எதிராக நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலை என கனடிய நாடாளுமன்றம் ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. ஒவ்வொரு ஆண்டும் மே-18 ஆம் திகதியை தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாக ஏற்று கனடா நாடாளுமன்றம் அங்கீகரித்தது. இதன் மூலம் இலங்கையில் இடம்பெற்ற தமிழ் இனப்படுகொலையை ஏற்று அங்கீகரித்த உலகின் முதல் நாடாளுமன்றமாக கனடா நாடாளுமன்றம் அமைந்துள்ளது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 13வது ஆண்டு நிறைவை முன்னிட்டு இதற்கான பிரேரணையை ஸ்காரப ரோ-ரூஜ் பார்க் தொகுதி (Scarborough-Rouge Park) கனேடிய-தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந் தசங்கரி (Gary Anandasangaree) 19/5/2022 முன்வைத்தனர், இந்த பிரேரணேயை நாடாளுமன்றில் அனைத்து கட்சிகளும் ஏகமனதாக ஏற்றுக் கொண்ட நிலையில் தமிழ் இனப்படுகொலை தீர்மானம் ஏகமனதாக ஏற்று அங்கீகரிக்கப்பட்டது,

இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் மே 18 ஆம் திகதியை தமிழ் இனப்படுகொலை தினமாக ஏற்று அங்கீகரிக்கும் உலகின் முதலாவது நாடாளுமன்றம் கனடாவாகும் என ஹரி ஆனந் தசங்கரி தெரிவிதுள்ளார், கனடா நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையானது பல வருடகால உழைப்பாகும். தமிழ் சமூகத்தைச் சேர்ந்த பலரது உழைப்பின் உச்ச விளைவாக இது நடந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.






விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# மிகப் பிரபலமான சில கண்டுபிடிப்புகள் தற்செயலாகத் தான் கண்டு பிடிக்கப்பட்டன, தெரியுமா?

அறிவியலில் எவ்வளவோ கண்டுபிடிப்புகள் இறந்தகாலத்தில் நடந்தன, நிகழ்காலத்தில் நடக்கின்றன, மேலும் எதிர்காலத்தில் நடக்கப்போகின்றன. அது ஒரு நாளும் நின்று விடப் போவது இல்லை. இதில் என்ன விசேஷம் என்றால், இறந்தகாலங்களில் எவ்வளவோ திட்டமிடப்படாத கண்டுபிடிப்புகள் நிகழ்ந்துள்ளன என்பது தான். என்ன புரியவில்லையா? ஒரு விஷயத்தில் ஆராய்ச்சி செய்துகொண்டு இருந்த ஆராய்ச்சியாளர்கள் தற்செயலாக வேறு



ஏதோ ஒரு விஷயத்தைக் கண்டுபிடித்துள்ளார்கள். இப்படித் தற்செயலாகக் கண்டுபிடிக்கப் பட்ட 5 மிகப் பிரபலமான கண்டுபிடிப்புகளைப் பற்றி சொல்லவா?

1) 1907ம் ஆண்டில் Leo Baekeland என்பவர் அரக்கு (Shellac) எனப்படும் ஒருவகை இயற்கைப் பிசினுக்குப் பதிலாக செயற்கை பிசின் உருவாக்கும் செயலில் ஈடுபட்டுள்ளார். ஆனால் அவர் அந்நேரம் கண்டுபிடித்தது செயற்கைப் பிசின் இல்லை. தற்செயலாக நெகிழி எனப்படும் பிளாஸ்டிக்கை உருவாக்கி விட்டார். இவரின் இந்த மாபெரும் கண்டுபிடிப்பினால் இன்று எங்குப் பார்த்தாலும் பிளாஸ்டிக் காணமுடிகிறது.

2) 1878ம் ஆண்டில் Constantin Fahlberg எனப்படும் ரசவாதி (chemist) அவரது ஆராய்ச்சிகள் முடிந்தவுடன் தனது கைகளைச் சுத்தம் செய்ய மறந்துவிட்டார். வீடு சென்றதும் தற்செயலாக அவரின் கைகளைச் சுவைத்துப் பார்த்த இவர், அவை இனிப்பாக இருந்தன என்பதை அவதானித்தார். அது தான் முதல் முறையாக இன்று பெரும்பாலும் நீரிழிவு நோயாளர்களால் உபயோகிக்கப்படும் சாக்கரின் (saccharin) எனப்படும் செயற்கை இனிப்பூட்டி உருவான நேரம் ஆகும்.



Dr.நிரோஷன் தில்லைநாதன் (யேர்மனி)

3) 1945ம் ஆண்டில் ரேடார் (Radar) ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள Percy Spencer எனப்படும் பொறியியலாளர் அவரது ரேடார் ஆராய்ச்சி நேரத்தில் காற்சட்டைப் பாக்கெட்டில் இருந்த சாக்லெட் உருகுவதை அவதானித்தார். அத்துடன் பிறந்தது தான் இன்று ஒவ்வொரு வீட்டிலும் காணப்படும் நுண்ணலை அடுப்பு (micro wave oven).

4) இந்த நான்காவது கண்டுபிடிப்புக்கு யார் சொந்தக்காரர் என்பது இன்று வரைத் தெளிவாகக் கூறமுடியவில்லை, ஆனால் இந்தக் கண்டுபிடிப்பு தற்செயலானது என்பதில் ஒரு மாற்றுக் கருத்துமே இல்லை. 1772ம் ஆண்டுக்குப் பின் நைட்ரஸ் ஆக்சைடு (Nitrous oxide) எனப்படும் வாயு பல வருடங்களாகச் சிரிப்பூட்டும் வாயு (laughing gas) ஆக உபயோகிக்கப் பட்டது. இந்த வாயு அளவுக்கு மீறிச் சுவாசித்தால் உடனடியாக மயங்கி விடுவார்கள் என்பதை அறிந்தவர்கள், அதனை அந்நேரம் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதைத் தெரியாமல் இருந்து விட்டார்கள். 1844ம் ஆண்டில் தான் Horace Wells என்னும் பல் வைத்தியர் தற்செயலாக இந்த வாயு மயக்க மருந்தாக உபயோகிக்கலாம் என்பதைக் கண்டுபிடித்தார். ஒரு கொண்டாட்டத்தில் சிரிப்பூட்டுவதற்காக அளவுக்கு மீறி சுவாசித்த நண்பர் ஒருவர் தவறி கீழே விழுந்து, உடலில் ஆழமான வெட்டுக் காயம் ஏற்பட்டும் ஒரு வலியும் இல்லாமல் இருந்ததை அவதானித்த இவர், அந்தச் சம்பவத்துடன் இன்றைய மயக்க மருந்தின் அடிப்படையைக் கண்டு பிடித்துவிட்டார்.

5) மருத்துவ உலகில் மிகவும் முக்கியமான கண்டுபிடிப்பு ஒன்று கூட தற்செயலாகத் தான் நிகழ்ந்தது. 1928ம் ஆண்டில்



Alexander Fleming என்பவர் இன்ஃபுளுவென்சா (Influenza) என்னும் வைரஸ்களுடன் (ஏசைரஸ்) ஆராய்ச்சி செய்துகொண்டு இருந்தார். விடுமுறைக்குச் சென்று திரும்பிய இவர்,

20 ஆம் பக்கம் பார்க்க...






விதியை திருத்தி எழுதியது மாத்திரமின்றி, ஒரு ஆணித்தரமான செய்தியையும் தமிழ் தேசிய கட்சிகளிடத்தில் முன்வைத்திருக்கிறார்கள்.அந்த செய்தி என்னவென்றால் தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டணியாக ஆட்சியமைத்தாக வேண்டிய நிர்ப்பந்தத்தை தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. ஆகவே சிங்கள கட்சிகளின் ஆதிக்கத்தை தமிழர் தாயகத்தில் தவிர்க்க வேண்டுமாகவிருந்தால் தமிழ் தேசிய கட்சிகள் ஒற்றுமைப்படுவது காலத்தின் கட்டாயமாக அமைந்திருக்கிறது.

கடந்த பாராளுமன்ற தேர்தலில், தமிழ் கட்சிகளின் பிளவும் பிரிந்து நின்று செயற்பட்டதுமே தமிழ் மக்கள் ஒரு சிங்கள கட்சிக்கு வாக்குகளை அள்ளி கொடுத்ததற்கு காரணமாக இருந்தது.அதாவது தமிழ் கட்சிகளுக்கு ஒரு தண்டனை கொடுப்பதாக அந்த ஆணை இருந்தது.ஆனால்,இம்முறை தமிழ் கட்சிகள் ஒன்றுபட வேண்டுமென்ற ஆணையை வழங்கியிருக்கிறார்கள்.இந்த ஆணையை தமிழ் தலைவர்கள் எவ்வாறு முன்கொண்டு சொல்லப்போகிறார்கள் என்பதிலேயே அவர்களின் எதிர்காலமும் தமிழர் தாயகத்தின் எதிர்காலமும் அமைந்திருக்கிறது. அந்த அடிப்படையில் பந்து தற்பொழுது தமிழ் தேசிய கட்சிகளின் எல்லைக்குள் போடப்பட்டிருக்கிறது.அந்த பந்தை எந்த பக்கத்துக்கு வீசப்போகிறார்கள் என்பதிலேயே தமிழர் தேசத்தின் எதிர்கால விதி எழுதப்படவிருக்கிறது.கடந்தகால வரலாற்று பாடங்களை வைத்துக்கொண்டு எதிர்வரும் காலத்துக்கான விதியை தமிழ் தலைமைகள் எழுதுவார்களா? இல்லை, மீண்டும் தமிழ் மக்களை ஒரு துன்பகரமான சூழலுக்குள் தள்ளிவிடுவார்களா?என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

அதேபோல், இந்த முள்ளிவாய்க்கால் மாதத்தில் தமிழ் மக்களுக்கு ஒரு ஆறுதல் தரும் செய்தியை கனடா தேசம் கொடுத்திருக்கிறது.தமிழர் தாயகத்திலேயே ஒரு தமிழினப் படுகொலைக்கான நினைவுத்

# தமிழ் மக்களின் ஆணையை தமிழ்த் தலைமைகள் மதித்து நடப்பார்களா?



தூபிக்கான வெற்றிடம் காணப்படும் நிலைமையில்,கனடாவில் தமிழினப் படுகொலைக்கான நினைவுத் தூபி அந்நாட்டு அரச அங்கீகாரத்துடன் நிறுவப்பட்டுள்ளமை ஈழத்தமிழர்களிடையே புத்தெழுச்சியை கொடுத்துள்ளது. தற்பொழுது குறித்த படுகொலை நினைவுத்தூபியை மையப்படுத்தி இலங்கையின் அரசினாலும் இனவாத சக்திகளினாலும் கடும் கண்டனங்கள் விடுக்கப்பட்டு வருகின்றன. இது ஒரு புறமிருக்க,இந்த தூபி திறப்பு கூட தமிழர் தேசத்துக்கு ஒரு இறுக்கமான செய்தியை கொடுத்திருக்கிறது.

அதாவது இந்த தூபி கட்டியெழுப்பப்பட்டது என்பது புலம்பெயர் தமிழர்களின் வாக்குப்பலத்தாலேயே சாத்தியமாகியுள்ளது. தாயத்தில் மக்கள் இத்தகைய வாக்கு பலத்தை சரியாக பயன்படுத்துகிறார்களா என்ற சந்தேகம் எழுகிறது.

கனடாவின் படிப்பினையை ஈழத்தமிழ் அரசியல்வாதிகளும் தாயக மக்களும் புரிந்துகொள்ள வேண்டும்.ஈழத்தமிழர்களின் வாக்குகள் மூலம் அரசியல் அடையாளத்தை பெற்றிருந்த சுமந்திரன் போன்றவர்கள், ஈழத்தமிழர்கள் மீது இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டதாக கூற முடியாது என்று சில ஆண்டுகளுக்கு முன் கூறியிருந்தார். ஆனால்,கனடாவின் நகரமேயர் தமிழினப் படுகொலைக்கான நினைவுத்தூபியை உருவாக்கியுள்ளதுடன், ஈழத்தமிழர்கள் மீதான இனப்படுகொலையை மறுப்பவர்கள் கனடாவிற்கு வரமுடியாது என்ற எச்சரிக்கையையும் வழங்கியுள்ளார்.ஆகவே இது சுமந்திரன் போன்ற தலைவர்களுக்கு சிறந்த பாடத்தை புகட்டியிருக்கிறது.

அது மாத்திரமல்ல ஒற்றுமைப்பட்டு ஓரணியாக தமிழர் தாயகம் தங்களுடைய வாக்குப்பலத்தை பாவிப்பதனூடாகவும் ஒருமைப்பாட்டு தமிழ் தலைமைகள் நிற்பதனூடாகவும் சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் தமிழர் தேசத்தின் எதிர்கால செயற்பாடுகளை முன்னகர்த்தி செல்ல முடியும் என்ற செய்தியையும் இந்த விவகாரம் படிப்பினையாக அமைந்திருக்கிறது.

அடுத்து,இன்று சர்வதேச சமூகம் ஈழத்தமிழர் விவகாரத்தை சற்று தள்ளிவைத்திருக்கும் ஒரு நிலைமையும் காணப்படுகிறது.ஆகவே கனடா போன்ற ஒரு தேசத்துடன் தமிழர் தாயகம் இணைந்து பயணிக்கும் சூழலை உருவாக்கும் பொழுது மீண்டும் சர்வதேசத்தில் தமிழர் விவகாரம் சூடுபிடிக்கும் நிலைமையை உருவாக்க முடியும் என்றதொரு படிப்பினையையும் தமிழர் தேசத்துக்கு கூறப்பட்டிருக்கிறது.

கனடாவில் அமைக்கப்பட்டுள்ள தமிழினப்படுகொலை நினைவுத்தூபியும் கனடா அரசாங்கத்தின் ஆதரவும், ஈழத் தமிழர்களின் இனப்படுகொலைக்கான நீதிப் போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு கொண்டுசெல்லும் ஒரு உந்துசக்தியாக உருமாறியிருக்கிறது.இதனைப் பற்றிக் கொண்டு சர்வதேச அளவில் ஏனைய சமூகங்களின் ஈடுபாட்டுடனும் ஒத்துழைப்புடனும் இனப்படுகொலைக்கான நீதிப்போராட்டத்தை சர்வதேச போராட்டமாக மாற்றுவது ஈழத்தமிழர்களின் அரசியல் வியூகத்திலேயே தங்கியுள்ளது.

ஆகவே,மேற்படி விடயங்களை கருத்தில் கொண்டு தமிழர் தாயகமும் தமிழ் தேசிய தலைமைகளும் இதுவரைகாலமும் விட்ட தவறுகளை திருத்திக்கொண்டு தமிழ் மக்களின் ஆணைக்கு மதிப்புக்கொடுக்கும் வகையில் ஒரு தேசமாக இணைவதுடன் புலம்பெயர் மக்களையும் ஒரு இனமாக இணைத்துக்கொண்டு அடுத்தகட்ட தமிழர் தேசத்துக்கான போராட்டத்துக்கு தயாராகுவது காலத்தின் தேவையாகும்.

இந்த சந்தர்ப்பத்தையும் தவற விடுவோமாகவிருந்தால் எதிர்வரும் நாட்கள் மிக மிக ஆபத்தானதாக எதிர்கொள்ள வேண்டிய சூழல் இருக்கிறது என்பதை மனதில் நிறுத்திக்கொண்டு முன்செல்ல தமிழ் தலைமைகள் ஓரணியில் இணைவது அவசியம்.ஆகவே தமிழர் தாயகத்தின் அனைத்து சபைகளையும் தமிழர்கள் ஆள்வதற்கான சூழலை சில விட்டுக்கொடுப்புகளுடன், கட்சி கொள்கைகளை தள்ளிவைத்துவிட்டு தமிழ் மக்களுக்காகவும் தமிழர் தேசத்துக்காகவும் இணைவது காலத்தின் அவசியமாகும்.

அந்த நல்ல மாற்றத்தை இந்த முள்ளிவாய்க்கால் அவல நாளில் ஆரம்பிப்பது தாயக மண்ணில் விதையான பல இலட்ச்சம் உறவுகளுக்கு செய்யும் ஒரு காணிக்கையாக கூட அமையும் என்பதை அனைவரும் புரிந்துகொண்டு நடப்போம்.

19 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## மிகப் பிரபலமான சில கண்டுபிடிப்புகள்

அவரது ஆய்வுக்கூடத்தில் தவறுதலாக ஸ்டாபிலோகோகஸ் (Staphylococcus) என்னும் கிருமிகள் வைத்து இருந்த ஒரு தட்டு மூடப்படவில்லை என்பதை அவ தானித்தார். பதறி ஓடி வந்து அதை நீக்க முயன்ற இவர், அந்தத் தட்டில் பூஞ்சை (அல்லது பூஞ்சணம்) பிடித்து இருந்ததைக் கவனித்தார். இதில் சுவாரசியமான விஷயம் என்னவென்றால், அந்த ஆபத் தான கிருமிகள் தட்டில் பூஞ்சை பிடித்த இடத்தைத் தவிர மீதி இருந்த எல்லா இடங்களிலும் பரவி இருந்தன. எனவே, இந்தப் பூஞ்சை உள்ள இடத்தை



அந்தக் கிருமிகள் தவிர்க்கின்றன என்பதைத் தற்செயலாகக் கண்டுபிடித்த இவர், பெனிசிலின் எனப்படும் நுண்ணுயிர் எதிர்ப்பி (antibiotic) உருவாக்குவதற்கு அடிப்படியாக இருந்தார். இந்த நுண்ணுயிர் எதிர்ப்பி இன்று நம்மைப் பல்வேறு நோய்களில் இருந்து குணப்படுத்துகிறது.

உண்மை சொல்லப்போனால் இன்னும் எவ்வளவோ கண்டுபிடிப்புகள் தற்செயலாக நிகழ்ந்து இருக்கின்றன. ஒன்றைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் போது, வேறு ஏதோவொன்றைக் கண்டுபிடித்து இன்று மனித வாழ்க்கையே மாற்றி அமைத்துள்ளனர்.

நண்பர்களே, அடுத்த முறை சமைக்கும் போது அல்லது குளிக்கும் போது ஏதாவது வித்தியாசமாக இருந்தால் அது என்னவென்று ஆராய்ந்து பாருங்கள். தற்செயலாக இந்த உலகையே மாற்றி அமைக்கக்கூடிய மருந்து மாத்திரை அல்லது வேறு சுவாரசியமான விஷயங்களைக் கண்டுபிடித்து விடுவீர்கள்.

என்ன நான் சொல்வது சரி தானே? சரி இனி நீங்கள் கூறுங்கள், உங்களுக்கும் இது போல் தற்செயலாகக் கண்டுபிடித்த ஏதும் கண்டுபிடிப்புகளைப் பற்றித் தெரியுமா? நீங்கள் கண்டு பிடித்த உங்கள் காதலன் காதலியைத் தவிர.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# திருமணம்

"நிமிர்ந்த நன்னடை
நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும்
அஞ்சாத நெறிகளும்
நிமிர்ந்த ஞானச்
செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவதில்லையாம்"

பெண்களுக்கோ ஆண்களுக்கோ திருமணம் அவர்களுடைய வாழ்க்கையைத் திருப்பிப் போடும் ஒரு ஒப்பந்த சாசனம்.

மேலும் சிந்தித்தால், ஒரு ஜெனிடிக் ஒப்பந்தம் என்று சொல்லலாம். இரண்டு பாலினருடைய மரபணுக்கள் கலந்து ஒரு ஆரோக்கியமான அடுத்த தலைமுறை உருவாக சமுதாயம் ஏற்படுத்திய ஒரு சடங்கு. அப்பா அம்மாவை திருப்திப்படுத்தவும், அம்மா அப்பாவை திருப்திப்படுத்தவும், ஒருவரை ஒருவர் பராமரித்துக் கொள்வதற்காகவும், உதவி புரிவதற்காகவும் திருமணம் செய்கிறார்கள் என்றால் அவர்கள் தங்களுடைய மரபணுக்களை அடுத்த தலைமுறைக்கு கடத்துவதற்கு முக்கியத்துவம் தரவில்லை என்று தான் கருத வேண்டியுள்ளது. ஆரோக்கியமான மரபணுவைக் கடத்த வேண்டும் என்பதே முக்கிய காரணமாக இருப்பது என்றால், அது திருமணத்தாலேதான் முடியும் என்றும் கூற முடியாது. ஒன்றாக வாழுகின்றோம் ஒன்றாகவா வாழுகின்றோம் என்று எத்தனையோ குடும்பங்கள் மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டு செல்கின்றார்கள். காலம் கடந்து என்னை மதுரையில கேட்டாக, மன்னார்குடியில் கேட்டாக, அந்த மாயாவரத்தில கேட்டாக என்று புலம்பித் தள்ளுவதைக் கேட்டிருக்கின்றோம்.

மனிதஇனம் விலங்கினமாய் வாழ்ந்த காலத்தில் உறவு முறையற்ற உடலுறவு மேற்கொண்டனர். சமூகம் என்னும்



ஒரு அமைப்பு உருக்கொள்ளாத காலத்தில் யாரோடும் சேரலாம் என்றிருந்தது. சமூகமெனும் அமைப்பு உருப்பெற்ற காலத்தில் ஒரு சிலர் ஒரு சிலரோடு சேர்ந்து வாழும் போக்கு உருவாகிப் பின் விரும்பியவர் விரும்பியவரோடு சேர்ந்து வாழ்ந்தனர். இச்சேர்க்கை வாழ்க்கை ஓர் சமூக அமைப்பாக உருவாகும் வரை திருமணம் என்ற நடைமுறை வழக்கில் இருந்ததில்லை. விலங்குகளாய் மனிதன் எந்தவித உடைமைகளுமற்று உணவைத் தேடி அலைந்த காலத்தில் திருமணம் தேவைப்படவில்லை. பின் ஆண்கள் கால்நடைகளை உடைமைகளாக்கப் பெண்கள் நிலங்களை உடைமைகளாக்கினர். நிலங்களில் பயிர் செய்வதற்கு ஆள்களின் துணை தேவைப்பட்டது. ஆள்களைப் பெருக்கவும் நிலங்களைப் பாதுகாக்கவும் பெண்களுக்கு ஆண்களின் துணை நிரந்தரத் தேவையாகப்பட்டது. இதனால் திருமணம் அவசியமாக்கபட்டது. நிலங்கள், கால்நடைகள் உடைமைகள் ஆகியது போல் ஆள்களும் உடைமைகளாக ஒவ்வொருவரும் தங்கள் குழந்தைகளை (குழந்தைச்செல்வம்) உடைமைகளாக்கினர். இதற்குத் திருமணம் அவசியமாகியது.



கௌசி
சிவபாலன்
(யேர்மனி)

விலங்குகளுடன் இணைந்து பகுத்தறிவில்லாது வாழ்ந்த மனிதன் ஆதி காலத்தில் அவற்றைப் போலவே உறவு கொண்டான். சகோதரன் சகோதரி, தாயும் மகனும், தந்தையும் மகளும் உறவு கொண்டனர். கணவன் இறந்தபின் மூத்தமகனைத் திருமணம் செய்துகொண்டநிலையையும் அறியக்கூடியதாக இருக்கின்றது. (J.G.Frager, Totemism&Progancy-1970 Vol. IVP .28).

இவ்வாறு வரன்முறையற்ற காட்டுமிராண்டி நிலையிலிருந்து குழுமணமுறை உருவாகிற்று. ஒரு குழு ஆடவர் ஒரு குழு பெண்கூட்டத்தை மணந்து கொண்டு வாழ்ந்தனர். இக்குழுமணமுறையிலிருந்தே பல கணவன் முறை உருவாகியிருக்கலாம். ஆனால் இங்கு சொல்லவருவது இளையதலைமுறைப் பெண்கள் திருமணத்தை வெறுக்கின்றார்கள் என்னும் கசப்பான உண்மை. அவர்களின் பார்வையை இங்கு பதிவிடுகின்றேன்.

ஆண்கள் தம்முடைய ஆவேசத்தை எந்த சந்தர்ப்பத்திலும் குறைப்பதில்லை. அதைப் பொறுத்துப் போகின்ற பக்குவத்தை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. ஒரே வாழ்க்கை அதை எம்மால் தனித்து வாழமுடியும். மகிழ்ச்சியாக வாழ முடியும்.

நேரம் சென்று இரவில் வீட்டைவிட்டு வெளியே போக வேண்டாம். ஏனென்றால், நாலு பேர் தப்பாகப் பேசுவார்கள். தப்பாகப் பேசினால், திருமணம் பேசும் போது கெட்ட பெயர் வரும். இரவில் வெளியே போகின்ற போது ஏதாவது நடந்து விட்டால்! அதாவது ஆண்களால் பிரச்சினை வரும். அதன்பின் யார் உன்னைத் திருமணம் செய்யப் போகின்றார்கள். இங்கு எல்லாவற்றுக்கும் திருமணமே காரணம். அதனால், "திருமணத்தை வெறுக்கின்றோம். "ஏன் இரவில் வெளியே போகின்றீர்கள்" என்றால், "ஆண்கள் ஏன் போகின்றார்கள்" என்னும் கேள்வி பந்து போல் வந்து விழுகின்றது. இக்காரணத்தால் விரும்பிய ஆடை அணிய முடியாது, விரும்பிய இடத்துக்குப் போக முடியாது, ஆண் நண்பர்களுடன் வெளிப்படையாகப் பழக முடியாது. இவ்வாறு கவனமாக இருந்து திருமணம் செய்து விட்டால், இஷ்டம் போல் வீட்டில் வாழ முடியாது. எதற்கும் விட்டுக் கொடுத்தல், எதிர்பார்த்தல், வேலைச் சுமை என்று அனுசரித்து வாழ்வது கசப்பாக இருக்கிறது. அனுசரிக்கும் போது மோசமான ஒரு ஆண் என்று தெரிந்த பின்னும் அவனுக்கு மேலும் பிள்ளைகளைப் பெறுகின்ற மோசமான முடிவு எடுப்பது. பிடிக்காது என்று விவாகரத்து எடுக்க முயற்சித்தால், பலவிதமான நடைமுறைகள். அதன்பின் வாழாவெட்டி என்ற அவப்பெயர். எப்போது இந்த சமுகம் இல்லாத பூமி அமையப்போகின்றதோ என்ற அங்கலாய்ப்பு.

பெண்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் ஆண்களே அவள் தன்னைவிட உயரத்துக்குச் சென்றுவிட்டால், பொறாமை அடைந்து விடுகின்றார்கள்.

28 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.





பு.சௌமியாராஜனி
(உடப்புஸ்ஸல்லாவை, இலங்கை)

# கொத்மலையில் கோர விபத்து!

# தாய்மையின் அர்த்தம் அவள் செயலில்

தாயின் அன்பு தன்னலமற்றது, தியாகமற்றது. இதனை நிருபித்து தரும் பல சம்பவங்கள் உலகெங்கிலும் நிகழ்ந்துள்ளன. அந்த வகையில் விபத்தில் தன் உயிரை கொடுத்து குழந்தையின் உயிரை காப்பாற்றிய தாயின் நிகழ்வு, தாய்மையின் உண்ணதத்தை மேலும் ஒரு முறை உணரச்செய்கிறது.

கடந்த 11.05.2025 திகதி அன்னையர் தின கொண்டாடத்தில் முழு நாடும் லயித்திருந்த வேளை கோர விபத்தொன்று நிகழ்ந்துள்ளது. கொத்மலையில் கெரண்டியெல்ல பகுதியில் நிகழ்ந்த ஒரு சோகமான பேருந்து விபத்தில், ஒரு தாயின் இறுதி கட்ட தைரியமும் தன்னலமற்ற தியாகமும் தனது 9 மாத குழந்தையின் உயிரை காக்க முக்கிய காரணமாக இருந்தது. கதிர்காமத்திலிருந்து குருநாகலைக்கு செல்வதற்காக புறப்பட்ட இலங்கை போக்குவரத்துக்கு சொந்தமான பஸ் ஒன்று கம்பளை வீதி வழியாக பயணித்து கொண்டிருந்த போது விடியற்காலை 4.30 மணியளவில் கெரண்டியெல்ல பகுதியில் சாரதியின் உடல்சோர்வு, தூக்க கலக்கம் காரணமாக வீதியை விட்டு விலகி 350 அடி பள்ளத்தில் வீழ்ந்தது.

அப்பேருந்தில் பயணித்த சுமார் 75 பயணிகளின் கனவுகளையும், தூக்கத்தையும், ஏக்கத்தையும், காதலையும் சுமந்து



வந்த பேருந்து ஒரு கணப்பொழுதில் பள்ளத்தின் கீழே கிடந்தது. பல சந்தர்ப்பங்களில் ஒரு கணப்பொழுதில் ஏது நடந்து விடப்போகின்றது என்று பேசுவதுண்டு. கண்ணிமைப் பொழுதில் நடைபெறும் விபத்தில் காவு கொள்ளப்படும் இழப்புகளின் போது மட்டுமே ஒரு நிமிடத்தின் பெறுமதி தெளிவாகின்றது.

22 பயணிகள் விபத்தில் இறந்ததுடன் பலரும் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இச்சம்பவத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த தாயும் தந்தையும் உட்பட 21 பேர் மரணித்தனர் மீரியபெத்த எஸ்.கே டிவிசன் கொஸ்லாந்தையை சேர்ந்த திரு.திருமதி எஸ்.காசிராஜன், ஜி.தனலட்சுமி தம்பதிகளே அவர்களாவர். தனலெட்சுமியின் நீண்ட நேர போராட்டத்தின் பின்னர் குழந்தை காப்பாற்றப்பட்டது. பலத்த காயங்களுடன் தாய் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி தன்னுயிர் நீத்தாள்.

ஆனால் தான் மரணமடைவதற்கு முன்னர் தன் குழந்தையை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ண ஓட்டத்தில் தான் அனுபவித்த உடல்வலி களை பொருட்படுத்தாது தன்னையும் தனது குழந்தையையும் விபத்து நிகழ்ந்த போது சிக்கி கொண்ட நிலையில், உடலை சுற்றிப் பிழைத்து பிடித்து தன்னை ஒரு பாது காப்பு கவசமாக மாற்றியுள்ளார்.

தன் குழந்தைக்காய் உயிர் தந்தாள் அந்த தாய். தன்னுடைய துணிச்சலான தியாகத்தை அந்த தாய் உலகத்திற்கே பறைசாற்றி உள்ளார்.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# மாஸ்கோவில் இரண்டாம் உலகப் போர் வெற்றி தினம்:



## 29 நாட்டு தலைவர்கள் முன் இராணுவ அணிவகுப்பு!

மாஸ்கோவின் இரண்டாம் உலகப் போரின் வெற்றி நினைவு தின விழாவில் இருபத்தி ஒன்பது உலகத் தலைவர்கள் கலந்து கொண்டனர் என்று கிரெம்ளின் அறிவித்துள்ளது.

இந்த வெற்றி விழாவிற்கு முன்பாக இரண்டாம் உலகப் போரில் நாஜி ஜெர்மனியை சோவியத் யூனியன் மற்றும் அதன் நட்பு நாடுகள் வென்றதன் 80 வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் ஏப்ரல் 28 அன்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மூன்று நாள் போர் நிறுத்தத்தை அறிவித்தார்.

மே 9 வெற்றி தின அணிவகுப்பில் 13 நாடுகளைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் மாஸ்கோ வழியாக அணிவகுத்துச் சென்றார்கள்.



ஐங்கரன் விக்கினேஸ்வரா

அஜர்பைஜான், பெலாரஸ், சீனா, எகிப்து, லாவோஸ், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், மங்கோலியா, மியான்மர், தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான், உஸ்பெகிஸ்தான் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த துருப்புக்கள் அணிவகுப்பில் கலந்து கொண்டன.

அதேவேளை ஆர்மீனியா, அஜர்பைஜான், பெலாரஸ், போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா, பிரேசில், புர்கினா பாசோ, சீனா, காங்கோ, கியூபா, எகிப்து, எக்குவடோரியல் கினியா, எத்தியோப்பியா, கினியா-பிசாவ், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், லாவோஸ், மங்கோலியா, மியான்மர், பாலஸ்தீனம், செர்பியா, ஸ்லோவாக்கியா, தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான், உஸ்பெகிஸ்தான், வெனிசுலா, வியட்நாம் மற்றும் ஜிம்பாப்வே ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் உட்பட இருபத்தி ஒன்பது வெளிநாட்டுத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

### மாஸ்கோவில் வெற்றி தின அணிவகுப்பு:

சீனாவின் ஜி ஜின்பிங் உட்பட பல்வேறு இருபத்தி ஒன்பது உலகத் தலைவர்கள், மாஸ்கோவில் நடைபெறும் இரண்டாம் உலகப் போரின் வெற்றி தின நினைவு தின விழாவில் கலந்து கொண்டார்.

மே 8-11 வரை நிகழ்வுகள் நடைபெற்ற பாரம்பரிய வருடாந்திர இராணுவ அணிவகுப்பு மே 9 அன்று ரஷ்ய தலைநகரின் மையத்தில் உள்ள செஞ் சதுக்கத்தில் நடைபெற்றது.

இரண்டாம் உலகப் போர் நினைவு நாளில் பல அமெரிக்க வீரர்கள் கலந்து கொண்டனர் என்றும் கூறப்படுகிறது..

### மே 9 இரண்டாம் உலகப் போரின் முடிவு:

ரஷ்ய கட்டுப்பாட்டில் உள்ள அப்காசியா மற்றும் தெற்கு ஒசேஷியாவின் பிரதிநிதிகளும், 31 நாடுகளைச் சேர்ந்த பாதுகாப்பு அமைச்சர்களும் இந்த அணிவகுப்பில் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு ஆண்டும் மே 9 அன்று, ஐரோப்பாவில் இரண்டாம் உலகப் போரின் முடிவைக் கொண்டாடும் வகையில் ரஷ்யா பிரமாண்டமான இராணுவ அணிவகுப்புகளை நடத்துகிறது. கடந்த ஆண்டு, ஒன்பது வெளிநாட்டுத் தலைவர்கள் மட்டுமே அணிவகுப்பில் புடினுடன் இணைந்தனர்.









விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# வானவில் போலொரு வாலிபம்

ரஞ்ஜனி சுப்ரமணியம் (கொழும்பு)



'பக்கத்து வகுப்பில பவித்திரா என்னை பாக்கும் போது வெக்கப்பட்டு சிரிக்கிறா... அவ அழகில நயன்தாரா அந்த மந்திரிச்ச முட்டைக்கண்ணில்மயக்கிறா... '

'எங்கட பெடியளின்ரை' ராப் சோங் காதில வந்து மோத மனம் இறக்கை கட்டி எங்கெல்லாமோ போச்சுது. சோக்கான பாட்டு. அவங்கள் மூண்டு பேரும் நல்லாத்தான் பாடுறாங்கள். தமிழ் தண்ணி மாதிரி கொட்டுது . நல்லா டான்சும் ஆடுறாங்கள். நல்ல செந்தழிப்பான பெடியள். சொன்னாப்போல, வட்ஸ்அப்பில இந்தப் பாட்டை எழுதி எனக்கு இப்ப ஞாபகப் படுத்தினது ஒரு இளந்தாரிப் பெடியன். ஆனா அதுக்கு முதலே நான் 'எங்கட பெடியளின்ரை' விசிறி.

என்ன விசயமெண்டால்...அவனுக்கு இதைக் கேக்க பழைய ஞாபகமெல்லாம் வந்திட்டுதாம். படிக்கிற காலத்தில தன்னை பாத்து சிரிக்கிற பெட்டையெல்லாம் தனக்கு சிநேகாதானாம். ஆனா... எண்டு இழுத்தான் அதுக்கு நான் என்னடாப்பா செய்யிறது? படிக்கிற வயசில மனசில் பட்டாம்பூச்சி பறக்கிறதெல்லாம் சகஜமடாப்பா.



இல்லாட்டிதான் ஏதோ பிரச்சனை இருக்கெண்டு நீ பயப்பிட வேணும். இந்த வயசில போய் இந்தப் பாட்டை ஞாபகப் படுத்தி எனக்கெல்லோ விசரைக் கிளப்பி போட்டான் எண்டு மனசுக்குள் சிரித்தபடி...

நான் எழுதினன், "எனக்கும் இந்த பாட்டு நல்லாப் பிடிக்கும் மகன். நாங்களும் இந்த வயசைக் கடந்துதானே வந்திருக்கிறம். அப்ப எங்களை சுத்தாத பெடியங்களோ? அல்லது ஒருத்தருக்கும் தெரியாம நாங்கள் கண் வைக்காத பெடியங்களோ? இப்படியெல்லாம் இல்லாட்டி யௌவனம் பாழ் என்னடா உதயன் ?"

"ஓமோம் தாயே...! இந்தப் புரிதல் எனக்கு நல்லாப் பிடிச்சிருக்கு. உங்களோட நான் கதைக்கிறதே எந்த வயசுக்கும் ஒத்துப் போற மாதிரி நீங்கள் கதைக்கிறதால தான்". அவனுக்கு சரியான குஷியாப் போச்சுது. வீட்டில மனிசிட்டை இதுகளை சொல்லி பேச்சு வாங்காம தன்ரை பழைய கதையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமா அவிட்டு விடத் தொடங்கினான்.

சிநேகிதப் பெடியளிட்டை சொன்னாலும் கதை வீட்டுக்குப் போயிடும் எண்ட பயமும் இருக்கும் போல.எனக்கும்பொழுது போக வேணுமே. "சொல்லு மகன் சொல்லு " எண்டு நல்லா உசாரேத்தி விட்டன்.

ஐயையோ கொஞ்சம் பொறுங்கோ . மனிசி அடிக்கிறா.

இதெண்ணடாப்பா கொடுமை. உன்னில கைவைக்கற லெவலுக்கு ஏன் இடம் குடுத்தனி. இப்பிடி ஒரு மருமகள் எனக்கிருந்தா கையை காலை முறிச்சு அடுப்பில போட்டிடுவன். அட.. நீங்கள் வேற. மனிசி கோல் அடிக்கிறா எண்டவன் தொடர்ந்தான்.

சரி. மிச்சத்தை கேளுங்கோ...நீங்கள் கேக்கிறதால நான் சொல்லுறன். ஆனா ஒரு விசயம்...எண்டு நிறுத்தினான். சரி நான் சொன்னா நீங்களும் உங்கட இளம் வயசுக் கதையில ஒண்டு ரெண்டாவது சொல்லோணும் எண்டு பெரிய கொண்டீசனா போட்டுட்டான்.

பயல் நான் நினைச்சமாதிரி ஒண்டும் இளிச்சவாய் இல்லை.சரி சரி எங்கை நீ சொல்லு பாப்பம் நான் முதல்லை கண் வைச்சது எட்டாம் வகுப்பில. அவளின்ரை பேரை சொல்ல மாட்டன். இன்னும் மனசில இடது பக்கத்தில கீழ் ஓரமா பத்திரமா வச்சிருக்கிறன். நாங்கள் படிச்சது போஸ் ஸ்கூல். அவள் கேள்ஸ் ஸ்கூல்.. ஆனா டியூஷனுக்கு ஒரே இடத்துக்கு போவம். அவள் எப்பவும் கிளாசில வலது பக்க முன்வரிசையில இடது கை வழமா இருப்பாள்.

சொல்லு சொல்லு லெட்டர் ஏதும் குடுத்தனியோ? அவசரப்படாதேங்கோ... நான் அவளை ஆரும் மறைக்காம பாக்குறதுக்கு வசதியா இடது பக்க வரிசையில வலது மூலையில இருப்பன். அப்பதான் அவள் தொண்ணூறு பாகை திரும்பி என்னை கடைக்கண்ணால பாக்கலாம். ஆனா நான் நாற்பத்தைஞ்சு பாகை திருப்பினா காணும். ஏன் எண்டால் சேர் அடிக்கடி கேள்வி கேப்பார் எண்டு போட்டு மூண்டாவது வரிசையில தான் எப்பவும் இருப்பன்.

நீ கணக்கில புலிதான். அப்ப அவள் உன்னை திரும்பி பாத்திருப்பாளே! ஓமோம் அடிக்கடி பின்னலை இழுத்து, முன்னால பின்னாலை விடுற மாதிரி பாப்பாள். அல்லது பேனை மூடியை கீழ போட்டு எடுப்பாள். இடைக்கிடை மோகனமா சிரிக்கவும் செய்தாள். பிறகு பக்கத்தில இருக்கிற தோழிட்டையும் வெக்கப்பட்டு கொண்டு என்னவோ சொல்லுவாள் . என்னைப் பற்றி என்ரை வடிவு பற்றி ஏதாவது ரசிச்சு சொல்லுவாள் போல.

நீ ஒண்டும் செய்யிறேல்லையோ

ஏன் இல்லை ? நான் கொம்பாஸ் பெட்டியில ஏதாவது ஒண்டை சத் தமா கீழ போட்டு திரும்பி பாக்க வைப்பன். ஆனா இரண்டாம் வாங்கில இருக்கிற மரமண்டையன் சில வேளை அந்த நேரம் பாத்து தன்ரை தலையாலை மறைச்சு போடுவான்.

இன்ரெஸ்டிங், மேல சொல்லு ஆனா அந்தக் கதை ...கனவு கண்ட காத

லாச்சு தாயே. ஏண்டாப்பா! நான் கண்ணதாசன்ரையும் வாலியின்ரையும் பாட்டில கொஞ்சம் கொஞ்

சம் கலந்து உல்டா பண்ணி, கடல்புறா சாண்டில்யன்ரை படு கிக்கான வசனமும் ஒன்றிரண்டை கலந்துகட்டி, ஒரு வசன கவிதைய றோஸ் நிற பேப்பரில எழுதி, அதுக்குள்ளை வாசத்துக்கு இரண்டு மல்லியைப் பூவும் வச்சு, கவரில போட்டு ஒழுங்கை மூலையில வந்து கொண்டிருந்த அவளிட்டை குடுக்கப் போனன்.

ம்...ம்..ம்...ம்..கெதியா...

அப்ப விர்ரெண்டு, பைக்கில நிண்டபடி ஓடிக்கொண்டு வந்து,

25 ஆம் பக்கம் பார்க்க...





Nandys Restaurant Bochum, Kortumstraße 9, 44787 Bochum/GERMANY | Tel: 0049 234 610 68 540

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# வானவில் போலொரு வாலிபம்

24 ஆம் பக்கத் தொடர்ச்சி...

படாரெண்டு காலால பிரேக் போட்ட அந்த இரண்டாம் வாங்கு தடியன் பொக்கற்றுக் குள்ளால ஒரு கடிதத்தை எடுத்து சிரிச்சுக் கொண்டு குடுக்க, இவள் பின்னால இருந்த பின்னலை முன்னால எடுத்து விட்டுக் கொண்டு அதே மோகனப் புன்னகையோட கடிதத்தை வாங்கிக் கொண்டாள்.

என்னடாப்பா? இப்பிடியாப் போச்சுது. அவன் உன்னை விட நல்ல வடிவோ? ச்சாச்சா....குரங்கு ...மந்திக் குரங்கு மாதிரி . இன்னும் இருக்கு கேளுங்கோ.

பிறகு, தான் ரெடியா சட்டைக்குள்ள செருகி வச்சிருந்த கடிதத்தை எடுத்து அவன்ரை கையிக்குள்ள திணிச்சாள். அவன் அதை எடுத்து மூக்கில உறிஞ்சி வாசம் பாத்து ஸ்டைலா முத்தம் குடுத்திட்டு பொக்கட்டில வச்சுக் கொண்டான்.

எனக்கு அழுகை அழுகையா வந்திட்டுது. நல்ல வேளை அவள் என்னைக் கவனிக்கேல்லை.

அப்ப நீ கடிதத்தை கிழிச்சுப் போட்டியோ ?

கவலையுடன் நான்

சீச்சீ...பத்திரமா வச்சிருந்தனான். இன்னொருக்கா கவிதை எழுதி மினக்கட ஏலுமோ? வேற பெட்டை ஒண்டு அம்பிடாமலோ போயிடும். ஆனா அந்தக் காஞ்சு போன மல்லியப்பூ மட்டும் இப்பவும் என்னட்டை பத்திரமா இருக்கு.

அது சரி. நீயும் அழகன்தானே? கிரிக்கட் அடிக்கிற உனக்கு இந்தப் பெட்டையை அடிச்சு விழுத்தேலாம போயிட்டுது பார். நல்லா கணக்கு விடுவியே. அதுகும் எடுபடாம போச்சுது. உதயன், அதுதான் பாட்டிலையே எங்கட பெடியள் பாடியிருக்கிறாங்களே

‘பொண்ணு ஒண்ணு உன்ன பாத்து சிரிச்சா அது எல்லாம் காதல் எண்ணு இல்லை, மச்சான்‘ எண்டு. இப்ப எனக்கும் மனசுக்குள்ள ஒரு பாட்டு கேட்டுது.

‘ஒரு முறைதான் காதல் வரும் தமிழர் பண்பாடு – அந்த ஒன்று எது என்பது தான் கேள்வி இப்போது‘ நனவிடை தோய்ந்து கொடுப்புக்குள்ள சிரிச்சுக் கொண்டேன்.

சரி உதயன். பின்ன பிறகு கதைப்பம் என்ன. இப்ப சமைக்க வேணும் நில்லுங்கோ. நில்லுங்கோ. உந்த விளையாட்டு எல்லாம் என்னோட வேண்டாம். உங்கட கதை எங்கை? நல்ல ஆளாயிருக்கிறியள். என்னட்டை நல்லா புடுங்கி புடுங்கி கதை கேட்டுப் போட்டு இடாச்சுக் கொண்டு ஓடப் பாக்கிறியள்.

அடப்பாவி, விட மாட்டானோ?

பத்தாம் வகுப்பு வரைக்கும் என்னை ஒருத்தரும் சைடு அடிக்கேல்லை எண்டு எனக்கும் சரியான மனவருத்தமடா. நானும் ஆள் கொஞ்சம் கறுப்புதானே. ஆனா என்னண்டா, இப்ப எனக்கு இன்னொரு கோல் வருதடாப்பா . ஏதாவது இருந்தா பிறகு யோசிச்சு சொல்லுறன் என்ன ?

மொபைலை அவசர அவசரமாக அணைத்தேன். நினைவு ஒரு பறவையாய் மேலெழுந்தது.

பதினோராம் வகுப்பு படிக்கும் போது பஸ்ஸில் தெல்லிப்பளைச் சந்தியில் இருந்து இரண்டாவது ஹோல்டில் ஏறுகிற, கல்பனாவின் ஓவியத்தை ஒத்த சிவத்த ஸ்டைலான பெடியன் ஞாபகத்தில் வந்து போனான். அதுக்குப் பிறகு யாழ்ப்பாணம் சந்திக்கடையில குமுதம் கல்கி வாங்கப் போகும் போது புத்தகக் கடையில கையை தொட்டுத் தாற சுருட்டை முடி இளந்தாரியையும் ஞாபகம் வருகுது. அடடா முக்கியமான ஆளை மறந்திட்டேன். அந்தக்கால பொப் சிங்கர் நித்தி கனகரட்னத்தில கூட ஒரு கண் இருந்ததே. இப்பிடி எங்கட தலைமுறைக்கும் எத்தினை எத்தினை கதை இருக்கு.

என்ன ஒண்டு...?

இப்ப இவங்கள் எல்லாம் சொல்லிக் கொண்டு திரிகிற மாதிரி ஒண்டையும் சொல்லேலாம கிடக்குது.

டிவியில நல்ல பாட்டொண்டு போகுது.

‘ஏதோ நினைவுகள் கனவுகள் மனதிலே மலருதே...‘ஓம்மா , என்ன எடுவைடாப்பா உது?

(பொறுப்புத் துறப்பு – உண்மையென்று யாரும் நம்பினால் கம்பனி பொறுப்பல்ல.)

# கனடா அமைச்சரவையில் இரு தமிழர்கள்

கனடாவின் புதிய வெளியுறவு அமைச்சராக இந்திய தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த அனிதா ஆனந்த் நியமிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் கனடாவில் இடம் பெற்ற பொதுதேர்தலில் மார்க் கார்னி தலைமையிலான லிபரல் கட்சி வெற்றி பெற்ற நிலையில் புதிய அமைச்சரவை நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

புதிய அமைச்சரவையில் மொத்தம் 28 அமைச்சர்கள் 10 மத்திய இணை அமைச்சர்கள் என்று மொத்தம் 38 பேர் இடம் பெற்றனர். இதில் 24 பேர் புது முகங்களாகும். இந்த அமைச்சரவையில் தமிழக வம்சாவளியை சேர்ந்த அனிதா ஆனந்த் இடம்பெற்றுள்ளார். அவருக்கு வெளியுறவுத்துறை ஒதுக்கீடு செய்யப் பட்டது. இதையடுத்து தமிழ் வம்சாவளி பெண்ணான அனிதா ஆனந்த் பகவத் கீதையை வைத்து அமைச்சராக பதவி பிரமாணம் செய்து கெண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கனடாவின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக இலங்கைத் தமிழரான ஹரி ஆனந்தசங்கரி பதவியேற்றுள்ளார். யாழ்ப்பாணத்தில்



பிறந்தவரான ஹரி ஆனந்தசங்கரி, இலங்கையின் மூத்த தமிழ் அரசியல் வாதியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்த சங்கரியின் இளைய புதல்வர் ஆவார். பொதுப் பாதுகாப்பு அமைச்சராக, ஹரி ஆனந்தசங்கரி, மக்கள் பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு, அவசர நிலை மேலாண்மை, குடியுரிமை மற்றும் எல்லை பாதுகாப்பு உள்ளிட்ட பல முக்கியப் பொறுப்புகளுக்கு தலைமை தாங்குவார்.

தேர்தலுக்கு இரண்டு வாரங்களுக்குப் பிறகு, மே 13, 2025 அன்று அறிவிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க அமைச்சரவை மறுசீரமைப்பின் ஒரு பகுதியாக ஹரி ஆனந்தசங்கரியின் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.




சுட்காட் ஸ்ரீசித்திவிநாயர் கோவில்
Tel: 0176 434 424 39, 7011 365 66 224 கொடி: 07.06.2025 - தேர்: 15.06.2025
Lehmfeld Str 18 70374 Suttgart

கற்றிங்கன் ஸ்ரீ வரசித்திவிநாயகர் ஆலயம்
Tel: 02324 27061, 01577 36 63 939 கொடி: 07.06 2025 - தேர்: 15.06.2025
Gottwald Str 23 45525 Hattingen.

ஹம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம்
Tel: 02388 302 223 கொடி: 09.06.2025 - தேர்: 22.06.2025
Siegenbeck Str 4-5, 59071 Hamm

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# ஈழத்துத் தமிழியல் | த.சண்முகசுந்தரம் சுவடுகள்; நூற்றாண்டு விழாக்கால வெளியீடு

'மறுமலர்ச்சிப்பாதையில் மக்கள் கலைகள்' என்ற தனித்துவமான தேடலின் வழி ஈழத்தமிழ் பண்பாட்டை எழுதிய முன்னோடிப் புலமையாளர் ,எங்கள் ஆசான் தமிழருவி மாவை த.சண்முகசுந்தரம்.



பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கன்
முன்னாள் துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்




கலை வரலாறு ,சமய வரலாறு,ஆளுமைகள், ஆக்க இலக்கியங்கள் என்ற வகைப்பாட்டுடன் அழகுற தொகுக்கப்பட்ட இந் நூலின் பொருண்மைகள் யாவும் எங்கள் பண்பாட்டுக் கருவூலங்கள் என்பேன். மறுமலர்ச்சிப் பாதையில் மக்கள் கலைகள்,அவரது தனித்துவமான புலமைத் தேடலின் தடமானது. தந்தையார், தலைமை ஆசிரியர் தம்புச் சட்டம்பியார் வழி வாய்த்த அழகிய சமூகமயமாக்கம் இயல்பாகவே மக்கள் கலைகளின் வழி பண்பாட்டினை இனவரைவியல் பக்குவத்துடன் தேடி எழுதும் முன்னோடிப் புலமையாளனாக்கியது. அவருக்கு வாய்த்த பேராசான் கலையருவி க. கணபதிப்பிள்ளை, இறுதி வரை நெருக்கமாக வழிகாட்டிய துணைவேந்தர் சு.வித்தியானந்தன் மற்றும் அவர் நண்பர்களான கலையுலக ஆளுமைகளினால் ஆய்வுகளும் ஆக்கங்களும் செழுமை கண்டன.

ஆசிரியர்,அதிபர்,ஆய்வாளர்,ஊடகவியலாளர், எழுத்தாளர், நாடக ஆசிரியர்,நாடகத் தயாரிப்பாளர் என பன்முக ஆளமையுடன் அவர் படைத்த ஆக்கங்கள் யாவுமே இன்றைய பண்பாட்டியல் கற்கை (Cultural Studies) அடிக்கோடிடும் மேலாண்மையில்லாத சமநீதிக் கருத்தியல் வழிப்பட்டன வாக கவனம் பெறுவன. பெரு மரபு (Great tradition),சிறு மரபு (Little tradition) என்றவாறு அடுக்கமைவான ஏற்றத் தாழ்வுகளை நியாயப்படுத்தும் எழுத்து முறையிலிருந்து மீண்டு அறிவார்ந்த முறையில் பண்பாட்டு வரலாற்றெழுத்தியலை (Cultural Historiography) கட்டமைக்கும் காலப் பணியில் அவரது ஆய்வு அணுகுமுறைகளும் ஆக்கங்களும் நிறைந்த உள்ளொளியைப் பாய்ச்சுவன. தேசிய விழிப்பு ணர்வுக்கான எங்கள் மகாஜனக்கல்லூரி ஆசானின் ஈழத்து தமிழியல் தடங்களை அயரா உழைப்புடன் தேடித்தொகுத்த தமிழியல் ஆய்வாளர்கள் பா.மகாலிங்க சிவம்,சி.ரமேஷ் ஆகியோருக்கு தமிழுலகம் கடமைப்பட்டது. அப்பாவின் நூற்றாண்டு நினைவாக அம்மாவுக்கும் உடன் பிறப்புகளான சேகருக்கும் செல்விக்கும் இந் நூலை காணிக்கையாக்கும் பிள்ளைகள் அருள் முருகனார், சிவதம்பு,அருள் மங்கையின் பணி போற்றுதற்குரியது.







# சர்வதேச ஜெர்மனி தமிழ் விருது விழா – 2025

26.04.2025 அன்று ஜெர்மனியில் டோட்மூண்ட் நகரில் நகரில் சர்வதேச ஜெர்மனி தமிழ் விருது விழா - 2025 பிரமாண்டமாக நடைபெற்றது. இவ் விழாவினை ஜெர்மனி தமிழ் MTV நிறுவுனர் N.V.சிவனேசன் அவர்களும், குடும்பத்தினரும் நடத்தியிருந்தனர். குறிப்பிட்ட நேரத்துக்கு விழா ஆரம்பித்தது.

கலைஞர்கள், ஊடகவியலாளரகள், எழுத்தாளர்கள், சமூகப்பணியாளர்கள் என 50 ஆளுமைகள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக "விழித்தெழு பெண்ணே" அமைப்பாளரும் ஒப்பனைக் கலை நிபுணருமான சசி நரேன் அவர்கள் கனடாவில் இருந்து வருகை தந்திருந்தார். டோட்முண்ட் நகர மேயர் கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பித்திருந்தார். இந்நிகழ்வுக்கு கனடா, ஹொலண்ட், சுவிஸ், டென்மார்க், பிரான்ஸ் போன்ற நாடுகளில் இருந்து விருதாளர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

விருதாளர்கள் அனைவரும் ஒன்றாக மேடைக்கு அழைத்து வரப்பட்டு புகைப் படம் ஒன்றாக எடுத்த பின் அவரவர்களுடைய இருக்கையில் அமர்த்தப்பட்டனர்.



அதன்பின் மங்களவிளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

மௌன ஆஞ்சலி, ஹம் காமாட்சி அம்மன் ஆலய குரு சிவஸ்ரீ பாஸ்கர குருக்கள் அவர்களின் ஆசியுரை தொடர்ந்து இடம்பெற்றது. அதன்பின் வரவேற்பு நடனம் முடிவடைந்தவுடன் விருது வழங்கல் நிகழ்வு இடம்பெற்றது. விருது வழங்கப்பட்ட போது விருதாளர்களின் விபரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

இடையிடையே நடனம், பாடல்கள் என நிகழ்வு சிறப்படைந்தது. ஜெர்மனி தமிழ் MTV நிறுவுனர் N.V.சிவனேசன் அவர்கள் எழுதி A.I மூலம் இசையமைத்த பாடல்கள் வெளியீடு செய்து வைக்கப் பட்டது. இப்பாடல்களை பென்டிரைவ் இல் பதிவு செய்து வழங்கினார்.

ஜெர்மனி தமிழ் MTV தொலைக்காட்சி நிகழ்வுகள் பற்றிய ஒரு காணொளியும் இந்நிகழ்வில் காட்டப்பட்டது. ஏறக்குறைய 9 மணித்தியாலங்கள் இந்நிகழ்வு நடைபெற்று முடிவடைந்தது.

**செய்தி:**
**கௌசி சிவபாலன் யேர்மனி**







# நிகழ்வின் நிழல்கள்











யேர்மனியில் மிகச் சிறப்பாக (11.05.2025) நடைபெற்ற தமிழ்மொழிச்சேவை கலாசார மன்றம் எசன் தமிழ்ப்பாடசாலையின் பேச்சு,சித்திர,தமிழ்த்திறன் போட்டிகள் 2025.



# அமுக்குவான் பேய்



பொலிகையூர் ரேகா
(இங்கிலாந்து)

நாம் உறங்கிக்கொண்டிருக்கும்போது திடீரென்று யாரோ நம்மை அமுக்குவதைப்போன்றிருப்பதைப் பலரும் தம் வாழ்நாளில் உணர்ந்திருக்கக்கூடும். எழ எத்தனித்தும் எழ முடியாமல் உதவிக்குப் பிறரை அழைக்கக் கத்தவும் முடியாமல் திணறிய பொழுதுகளிலெல்லாம் பேயோ பிசாசோவென அச்சம் கொள்ளும் வண்ணம் நம் முன்னால் கறுப்பு உருவங்களோ இறந்தவர்களோ உலவுவதைப் போன்ற மாயத் தோற்றங்களைக் கண்டிருக்கக் கூடும்.

இதைத்தான் அமுக்குவான் பேய் அல்லது அமுக்குனிப் பேய் எனப் பலக் கட்டுக்கதைகளின் முக்கிய பேசுபொருளாகப் பயன்படுத்துகின்றனர்.உண்மையில் இது எந்தப் பேயுமல்ல. தூக்கப் பக்கவாதம் அல்லது உறக்க முடக்கம் (sleeping paralysis) எனப்படும் ஒரு நிலை ஆகும்.

உறக்கமுடக்கம் (Sleeping Paralysis) என்பது, ஒருவருக்கு தூக்கம் அல்லது விழிப்பு நிலையில் உடலை நகர்த்த முடியாத ஒரு நிலையாகும். இது பொதுவாக இரவு நேரத்தில் ஏற்படுகிறது, சில சமயங்களில் பயமூட்டும் காட்சிகள், மாயத் தோற்றங்கள் (hallucinations) உடன் சேர்ந்து தோன்றும். இது மருத்துவ ரீதியாகக் கவலைக்குரியதாக இல்லாமல் இருந்தாலும், அனுபவிக்கும் நபருக்கு மிகுந்த பதட்டத்தையும் பயத்தையும் ஏற்படுத்தக்கூடியது நல்ல உறக்கத்தில் இருக்கும்போது யாரோ அமுக்குவதைப் போன்றிருக்கும். மலையில் இருந்து அதள பாதாளத்தில் விழுவது போன்றிருக்கும். எழ நினைத்தாலும் கை கால்களக அசைக்க முடியாது. கத்துவதற்கு நினைத்தாலும் சத்தம் வராது.இது கனவா நனவா என்ற ஐயம் ஏற்பட்டு மறையும். சிலர் கண் விழித்துப் பார்க்க எத்தனித்தாலும் அவர்களால் உடலைச் சிறிது கூட அசைக்க முடியாது.இந்த நிகழ்வானது ஒரு நொடியிலிருத்து இரண்டு நிமிடங்கள் வரை நீடிக்கக்கூடும்.

பல காலமாக இதைப் பேய் பிடித்ததற்கான அறிகுறி அல்லது யாரோ நெருக்கமான உறவினர் தன் ஆசை நிறைவேறாமல் சுற்றி வருவதால் இப்படித் தொல்லை செய்வதாக எல்லாம் சொல்லப்பட்டு வருகிறது.ஆழ்மனது விழிப்பு நிலையிலும் உடல் தூக்க நிலையிலும் இருப்பதால் வரும் தடுமாற்றமே இதற்குக் காரணம்.

தூக்கம் 4 வகையாக பிரிக்கப்படுகிறது. இதில் 3வது நிலை ஆழ்ந்த தூக்கமாகும். இதை கடந்து REM எனப்படும் நான்காவது நிலைக்கு

28 ஆம் பக்கம் பார்க்க...



27 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## அமுக்குவான்

போகும்போதுதான் நாம் கனவு காண்கிறோம். தொடக்கத் தில் இந்த REM நிலையானது குறைந்த நேரம்தான் இருக்கும். இந்த நிலையில் நமது மூளை காபா மற்றும் கிளைசின் (GABA and glycine) என இரண்டு அமிலங்களை சுரக்கிறது. இந்த அமில ங்கள் நமது நரம்பு மண்டலத்தை சமநிலையில் வைத்திருக்கிறது. அதாவது, நாம் கனவு காணும் போது அதை நிஜம் என்று நம்பி உடல்களை அசைத்துவிடக்கூடாது. எனவே நமது உடலை கட்டுப்படுத்த இந்த அமிலங்கள் பயன்படுகின்றன. இந்த அமிலங்கள் சுநுஆ தூக்க நிலையில் மட்டுமே சுரக்கும். இப்படி இருக்கையில், திடீரென எதிர்பாராத விதமாக நாம் கண்விழித்



துவிட்ட பின்னரும் கூட இந்த அமிலங்கள் சுரந்துக்கொண்டிருந்தால் நம்மால் பார்க்க மட்டுமே முடியும். மற்றபடி கை, கால், தலை என எதையும் அசைக்க முடியாது.இதுதான் தூக்க பக்கவாதம் (sleep paralysis). தூக்கமின்மை, அதீத உடல் உழைப்பு, சரியான நேரத்தில் உணவு உண்ணாதிருத்தல், உறங்காது இருத்தல், மன அழுத்தம் போன்றவை இதற்கு வழிவகுக்கும். இந்த நிலை ஏற்பட்டால், எதுவும் பயப்படத்தேவை இல்லை. சீரான உடல் இயக்கத்துக்கு முக்கியத்துவம் கொடுங்கள். எல்லாவற்றையும் சரியான நேரத்தில் செய்யுங்கள். இந்தச் சிக்கல் தொடர்ந்தால் பூசாரியையும், பேயோட்டுபவரையும் நாடாமல் மருத்துவரை மட்டும் அணுக வேண்டும். ■

21 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## திருமணம்



பொறுப்பான பதவியை நேரம் எடுத்துச் செய்து முன்னேற்றத்தை அடைய முடிவதில்லை. மனிதனுடைய வாழ்க்கையில் எல்லோரும் போல் திருமணம் செய்தே வாழ வேண்டுமா? அதைவிட மனிதர்களுக்கு வாழ்க்கை இல்லையா? இவ்வாறான பல கேள்விகளைச் சுமந்து இளம் பெண்கள் திரிகின்றார்கள். உண்மையில் திருமண நிகழ்விலே பெண்ணைத் தத்தம் செய்து கொடுப்பது ஆணுக்கு உரிமைச் சாசனம் எழுதிக் கொடுப்பது போல் அவளை அடிக்கலாம் உதைக்கலாம். ஏனென்றால் தத்தம் பண்ணிக் கொடுத்த பொருளை திரும்பப் பெற முடியாது. அவனுக்கு உரிமைச் சாசனம் எழுதிக் கொடுத்தாயிற்று.

வடநாட்டில் பெண்களுக்கு முகத்திற்குத் திரை போடும் பழக்கம் இருந்து வந்தது. அங்கே யுத்தங்கள் அடிக்கடியும் அதிகமாகவும் நடந்து வந்தன. அந்தப் போர்களில் முதலில் பெண்களைத் தான் சூறையாடுவார்கள். அதன் பின்பே பொன், பொருள் இவைகளைக் கொள்ளையடிப்பது என்ற நிலை இருந்தது. எனவே பெண்களின் பாதுகாப்பைக் குறித்து, முகத்தைக் காண்பிக்காமல் திரை போட்டார்கள். போர்க்காலத்தில் மட்டுமல்ல, பிற்காலத்திலும் அரசியல் அதிகாரத்தில் உள்ளவர்களிடம் இருந்து பெண்களுக்குப் பாதுகாப்புத் தேவைப்பட்டது. சிற்றரசர்கள், ஜமீன்தார்கள் இவர்களாலும் பெண்களுக்கு ஆபத்து இருந்து வந்தது. ஒரு குடும்பத்தில் மனைவி, அண்ணி, தம்பியினுடைய மனைவி இவர்களெல்லாம் இருக்கின்ற போது முகத்திற்குத் திரை போட்டு இருப்பதால் காலைப் பார்த்து அடையாளம் கண்டு கொள்ள, திருமணத்தின்போது மணப்பெண்ணுக்கு மெட்டி போட்டு காலை அடையாளம் கண்டு கொள்ள மணமகன் அம்மி மேல் மணமகளின் காலைத் தூக்கி வைப்பது என்ற சடங்கை ஏற்படுத்தினார்கள். இதுதான் காலுக்கு மெட்டி போடுவது. இவ்வாறான சடங்குமுறைகள் இந்தக் காலத்திற்குத் தேவையில்லாத ஒன்றாகிவிட்டது. ஆயிரம் பேரை அழைத்து அன்றைய நாள் முழுவதும் திருமண விழாவை நடத்தி ஆண்கள் கடனாளியாகவே திருமணத்தை ஆரம்பிக்கின்றார்கள்.

இவ்வாறு குற்றச்சாட்டுக்களால் பெண்கள் மனது நிரம்பி வழிகின்றது. இதற்கு ஆண்கள் என்ன பதில் சொல்லப் போகின்றார்கள்? ■

15 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## தனிநிலை வாழ்க்கையில்

குறித்த அவதூறான விமர்சனங்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது.

அதிகப் பொறுப்பு – பொருளாதாரம், வீட்டு வேலைகளை நிர்வகித்தல் மற்றும் முக்கிய முடிவுகளை நிர்வகிப்பது என் அனைத்தையும் தனியாகச் செய்வது காலப்போக்கில் (மனம்/ உடல்) சோர்வடையச் செய்யும்.

வயதான காலத்தில் தனிமை சவாலாக மாற வாய்ப்பு இருக்கிறது – நீண்ட காலமாகத் தனிமையில் இருப்பவர்கள், மனத்திற்குத் திருப்திகரமான செயல்களில் தீவிரமாக ஈடுபடவில்லை என்றால், நேரத்தை சமாளிப்பது கடினமாகி விடும். உடல் தளர்ச்சியும் மனத் தளர்ச்சியும் சேரும்போது புறக்கணிக்கப்பட்ட ஓர் உணர்வு ஏற்படும். அப்போது ஒரு துணை இல்லேயே என்ற சுயபரிதாபத்துக்குள் சிக்கிக்கொள்ளும் வாய்ப்புகள் அதிகம். இவை அனைத்தையும் ஆராய்ந்து பார்க்கையில், என்னைப் பொறுத்தவரையில் இன்றைய காலகட்டத்தில் ஒரு பெண்ணோ ஆணோ தனியாக வாழ்வதென்பது கடினமானதொன்றும் இல்லை என்றே நினைக்கிறேன். நேரம் மற்றும் உணர்வுகளைச் சாமர்த்தியமாகக் கையாளத் தெரிந்து கொண்டால் தனிமை வாழ்க்கையை மகிழ்ச்சியாகவே வாழலாம். அதுமட்டுமின்றி வருங்காலத்தில் இப்படி வாழ்பவர்கள் எண்ணிக்கை கூடும் பட்சத்தில் நாம் தனித்து இருக்க மாட்டோம். (We won‘t be an odd man/woman out) தனி மனிதர்கள் இணைந்தியங்கும் கூட்டத்தில் வலிமை மிக்கத் தனிப் பாலினமாகவே இருப்போம் என நம்புகிறேன். ■

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## “ஆம்பிளை

இப்படியான ஆக்கபூர்வமான திட்டங்களில் பயன்படுத்த முடியும். அரசாங்கப் பாடசாலைகளும், தனியார் பாடசாலைகளும் போக, பிள்ளைகளின் பாதுகாப்பு மிக அவசியமாக உறுதி செய்யப்பட வேண்டிய இடம், தனியார் கல்வி நிறுவனங்களாகும் (Tutoring Centers). தனிமனிதர் ‘ஆட்சியின்’ கீழ் இயங்கும் இத்தகைய நிறுவனங்களுக்கு, கண்டிப்பான அரச மேற்பார்வையும், விதிமுறைகளும் அவசியம். childsafe!children !child abuse! child safety ■

05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## திருமணங்கள் தள்ளிப்

### திருமணங்கள் தள்ளிப் போவதன் விளைவுகள்

திருமணங்களைத் தாமதப்படுத்துவது என்பது நீண்டகால நோக்கில் ஒரு சமூகத்துக்கு அல்லது ஒரு நாட்டுக்குப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய விடயம் என்பதை நாம் அலட்சியப்படுத்திவிட முடியாது. குறிப்பாக ஒரு தேசத்தின் மக்கள் தொகை படிப்படியாகக் குறைந்து வருவது அத்தேசத்துக்கு எதிர்காலத்தில் பெரும் பிரச்சனைகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு விடயமாகும். முதியோர்களின் எண்ணிக்கையைவிட இளையோரின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கும் சாத்தியம் உண்டு. உள்நாட்டில் பெரும் தொகையினராக உள்ள முதியோர்களின் பராமரிப்புச் செலவை மிகக் குறைந்த எண்ணிக்கையிலான இளையோர் சுமக்கவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும். வெளிநாட்டு அச்சுறுத்தல்களில் இருந்து நாட்டைக் காப்பதற்குப் போதுமான படைபலம் இருக்காது. உடல் உழைப்பை ஆதாரமாகக் கொண்ட தொழில்கள் முடங்கிவிடும். பல விடயங்களுக்கு ரோபோட் எனப்படும் தனியங்கிகளையே நம்பி இருக்கவேண்டிய நிலை ஏற்படும். இத்தகைய பேராபத்துக்களில் இருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கும் மக்கட்தொகையை சீரான முறையில் பேணுவதற்கும் குடும்பவாழ்வைத் தொடங்க விரும்பும் இளஞர் யுவதிகளுக்கு இருக்கக் கூடிய தடைகளையும் அச்சங்களையும் ஓரளவேனும் குறைக்க உதவுவது பொறுப்புள்ள அரசாங்கங்களின் கடமையாகின்றது.

(நன்றி.தமிழுர்தகவல்) ■




# சினக்க வைக்கும் மலச்சிக்கல்



உணர்வு ஏற்படுவதும், மலம் தானாக வெளியேற முடியாது இருப்பதால் விரல்களைப் போட்டு அகற்ற வேண்டி நேர்வதும் மலச்சிக்கலில் அடங்கும்.

தினமும் மலம் வெளியேறுவதுதான் உணவு குழாயினதும், சமிபாட்டுத்தன்மையினதும் ஆரோக்கியத்திற்கான அறிகுறி என்றே பலரும் நம்புகிறார்கள். உண்மையில் அவ்வாறில்லை. மூன்று நாட்களுக்கு ஒரு தடவையே வழமையாக மலம் வெளியேறுபவரின் ஆரோக்கியம் தினமும் வெளியேறுபவரது ஆரோக்கியத்திற்கு எந்தவிதத்திலும் குறைந்தது அல்ல.

உலகளவிய ரீதியில் 16 சதவிகிதமானவர்களுக்கு மலச்சிக்கல் இருப்பதாகத் தெரிகிறது. அதே நேரம் பெண்கள் ஆண்களைவிட அதிகமாக மலச்சிக்கலால் பாதிக்கப்படுவதும் அவதானிக்கப்படுள்ளது. பொதுவாக வயதானவர்களிடையே மலச்சிக்கல் ஏற்படுவது அதிகம். அறுபது வயதிற்கு மேற்பட்டவர்களில் 33 சதவிகிதமானவர்கள் மலச்சிக்கலால் பாதிக்கப்படுகிறார்களாம். அதே போல குழந்தைகளிலும் அதிகம் ஏற்பட வாய்ப்புண்டு. படுக்கையில் கிடக்கும் நோயாளிகளிலும் ஏற்படலாம். பல கர்ப்பணிப் பெண்களுக்கும் அதிகம் ஏற்படுகிறது.

## இது ஏன் ஏற்படுகிறது

நாம் உண்ணும் உணவானது இரைப்பை, சிறுகுடல் போன்றவற்றில் சமிபாடடைந்து பெருங்குடலை அடைகிறது. இங்கு நீரும் மீதமிருக்கும் போசணைகளும் உறிஞ்சப்பட்ட பின்னர் கழிவுகள் மலமாக மலக்குடலை அடைக்கின்றன.

தவறான உணவு முறையே மலச்சிக்கலுக்கு பிரதான காரணமாகிறது. நார்ப்பொருள் குறைந்த உணவுகளை உண்பதும் போதிய நீராகாரம் உட்கொள்ளாமையுமே முக்கியமானவை.

நார்ப்பொருள் அதிகமுள்ளவை தாவர



உணவுகளோயாகும். காய்கறிகள், பழவகைகள், போதியளவு எடுக்க வேண்டும். இலை வகை உணவுகளிலும், பயறு பருப்பு உழுந்து போன்ற பயற்றின உணவுகளிலும் தாராளமாகக் கிடைக்கின்றன. அதே போல வாழைப்பழம், பப்பாசி உட்பட நார்ப்பொருள் உள்ள உணவுகளையும் தினசரி போதியளவு உணவில் சேர்க்க வேண்டும்.

இதைச் சொன்னவுடன் பல நோயாளிகள் நான் மரக்கறி சாப்பாடுதான் சாப்பிடுறனான் என்று சொல்வார்கள். ஒரு பானை சோற்றிற்கு ஒரு தேக்கரண்டி அளவு மரக்கறி சேர்த்திர்களா என நான் கிண்டல் அடிப்பதுண்டு. எனவே முக்கியமானது எவ்வளவு அதிகமாக பழங்களையும் காய்கறிகளையும் உண்பதுதான்.

போதிய நீராகாரம் அருந்தாமை, உடல் உழைப்பு இல்லாமல் சோம்பிக் கிடப்பது, மலங்கழிக்க வேண்டும் என்ற உணர்வு வந்தால் அதை அலட்சியப்படுத்தி தாமதிப்பது, மலங்கழிக்கும் ஒழுங்கானது, பிரயாணம் போன்றவற்றால் குழம்புவது போன்றவையும் காரணங்களாகலாம்.

சிலவகை மருந்துகளும் மலச்சிக்கலை சிலரில் ஏற்படுத்துவதுண்டு குடல் புண்ணுக்கு குடிக்கும் பாணி மருந்துகள், வலிநிவாரணி மருந்துகள், கல்சியம் மற்றும் இரும்பு சத்து மாத்திரைகள் எனப் பல உண்டு.

நீரிழிவு, பக்கவாதம், பார்க்கின்சன் நோய் போன்ற சில நோய்களும் மலக்குடலின் இயல்பான செயற்பாட்டை குறைத்து மலச்சிக்கலைக் கொண்டு வருவதுண்டு. தைரொயிட் சுரப்பி குறைபாட்டு நோயும் மலச்சிக்கலை கொண்டு வருவதுண்டு. புற்றுநோய் கட்டிகளும் காரணமாகலாம்.

## நீங்கள் என்ன செய்ய வேண்டும்

ஏற்கனவே குறிப்பட்டது போல நார்ப் பொருள் அதிகமுள்ள காய்கறிகள் பழவகைகள் போன்றவற்றை அதிகளவு உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். போதிய நீராகாரம் அருந்துங்கள்.

கோப்பி அருந்துவதைத் தவிருங்கள். அது மலச்சிக்கலை மோசமாக்கும். மதுபானமும் அதே போல மலச்சிக்கலை மோசமாக்கும் என்பதால் மது அருந்துவதையும் தவிருங்கள். அதே நேரம் இறைச்சி முட்டை, பால், சீஸ், பதப்படுத்தப்பட்ட உணவுகள் போன்றவற்றை அதிகம் எடுக்காது அளவோடு உண்ணுங்கள்.

தினமும் உடலுழைப்பில் ஈடுபடுங்கள் அல்லது உடற்பயிற்சி செய்யுங்கள். மலச்சிக்கல் மருந்துகளை கண்டபடி உபயோகிக்க வேண்டாம். அவை உடனடியாக மலத்தை இளக்கினாலும், அடிக்கடி உபயோகிக்கும் போது மலக்குடலின் செயற்திறனைப் பாதித்து மலச்சிக்கலை மோசமாகவே செய்யும்

மலச்சிக்கல் கடுமையாகவும் தொடர்ந்து நீடிக்கவும் செய்தால் சில பின்விளைவுகள் ஏற்படக் கூடும். முக்கியமாக மூலநோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம். அதே போல மலவாயிலில் வெடிப்பு, புண்கள் ஆகியவையும் தோன்றலாம். மலக் குடல் இறங்குவதற்கான சாத்தியங்களும் உண்டு. எனவே மலச்சிக்கல் ஏற்கனவே கூறப்பட்ட சுயபாராமரிப்பு முறைகளால் குறையவில்லை எனில் மருத்துவ ஆலோசனை பெறுங்கள். அவர் விரல் வைத்து குதப் பரிசோதனை செய்து பார்ப்பார். சில இரத்தப் பரிசோதனைகளும் செய்யக் கூடும். மலக் குடலினுள் குழாய் விட்டு பரிசோதனையும் செய்யக் கூடும்.

பொதுவாக மலச்சிக்கல் ஆபத்தான பிரச்சனை அல்ல என்றபோதும் கவனத்தில் கொள்வது அவசியம். ■

# வடக்கு முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்குகின்றார் சுமந்திரன்!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராகத் தான் களமிறங்கவுள்ளார் என்று அக்கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் அறிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினாக இருக்கும் சிவஞானம் சிறீதரன், தான் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடமாட்டார் என ஏற்கனவே தெரிவித்திருந்தார். இந்நிலையில், வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராகத் தான் போட்டியிடவுள்ளார் என்று சுமந்திரன் கூறியுள்ளார்.

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர்களை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்கள் நேற்று, யாழ். நல்லூரில் உள்ள சுமந்திரனின் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.



”இந்தச் சந்திப்பின்போது அடுத்து வரும் மாகாண சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளரா கத் தானே களமிறங்கப் போகின்றார் என்று சுமந்திரன் எங்களிடம் கூறினார்.” – என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத்தலைவர்களில் ஒருவரான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

”ஆனால், சுமந்திரனின் இந்த நிலைப்பாட்டுக்கு ஆதரவு அல்லது எதிர்ப்பு என்ற விடயங்கள் குறித்து எதுவும் நாங்கள் பேசவில்லை. ■




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# இந்திரவிழா வல்வை மக்களின் வரலாற்று நிகழ்வாகும்
# இந்திரா விழாவில் சிதம்பரா கணிதச் சமர் 2025





வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு வருடந்தோறும் நடத்தப்படும் இந்திரவிழா வல்வை மக்களின் வரலாற்று நிகழ்வாகும். ஊறணி முதல் ஊரிக்காடு வரை 3 கிலோ மீற்றர் நீளத்திற்கு வாழை மரங்களும் தோரணங்களும் வர்ண விளக்குகளும் இசை நிகழ்ச்சிகளும் நாட்டிய நடன இசை மேடைகளும் சொல்லி மாளாத இன்ப இரவாய் அமைந்தது.

இதிலே அறிவுலகத்தின் அற்புதப் போட்டியாய் தேசிய அளவில் பல முன்னணிப் பாடசாலைகள் பங்குபற்றிய அற்புதக் கணிதச் சமர் பிரமாண்டமாய் அமைந்திருந்தது.

பல சுற்றுப் போட்டிகள், கௌரவிப்புக்கள், பரிசுகள், கேடயங்கள் என்பவற்றுடன் நேர்த்தியான ஒழுங்கமைப்பு நேரம் சாமம் 12 ஐ தாண்டியும் களைப்பில்லாம் நிகழ்வை நிறைவு செய்த அர்ப்பணிப்பு. அனைவருக்கும் உணவு வழங்கி அற்புதமாய் வரவேற்றார்கள்.

பல மணித்தியாலங்கள் பல பாடசாலைகள் பங்குபற்றிய இப்போட்டிகளில் முதலிடத்தினை திருகோணாமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியும், யாழ் அளவெட்டி அருணோதயக் கல்லூரி இரண்டாம் இடத்தையும் பெற்றார்கள். மூன்றாம் இடத்தினை அல் அக்ஷா தேசிய பாடசாலையும் பெற்றுக் கொண்டது. இது ஒரு அற்புதமான அறிவுச்சமர் எனக் கூறலாம். ■

**செய்தி. குரும்பசிட்டி கவிஞர் த.ஐங்கரன்**




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.




# 75 வருடங்களுக்கு முன்பே வந்த டைம் டிராவல் படம்

“டைம் டிராவல்“ என்பது ஒரு விஞ்ஞான கற்பனை. அதாவது நிகழ்காலத்தில் இருந்து கடந்த காலத்திற்கும், எதிர்காலத்திற்கும் பயணிப்பது. இது கற்பனை கருவி என்றாலும் சுவாரஸ்யமானது.

இந்த டைம் டிராவலை மையமாக வைத்து ஏராளமான படங்கள் ஹொலிவூட்டில் வெளிவந்திருக்கிறது. தமிழிலும்கூட அவ்வப்போது வந்திருக்கிறது. முக்கியமான படமாக இன்று நேற்று நாளை, சூர்யாவின் “24“,சந்தானத்தின் டிக்கிலோனா ஆகிய படங்களை சொல்லலாம். ஆனால் 75 வருடங்களுக்கு முன்பே இன்பவல்லி என்ற படத்தில் இந்த டைம் டிராவல் யுக்தியை பயன்படுத்தியிருக்கிறார்கள்.

ஒரு காலக் கண்ணாடி இருக்கும், எந்த காலத்துக்கு நாம் செல்ல வேண்டுமே அந்த காலத்தை சொல்லி சில மந்திரங்களை சொன்னால் அந்த கண்ணாடி அந்த காலத்தில் நடந்ததை காட்டும். பிற்காலத்தில் அந்த காலகட்டத்திற்குள் உள்ளே போவது மாதிரியான கதை வளர்ச்சி ஏற்பட்டது.

அதன் முன்னோடி இந்த காலக்கண்ணாடி. இந்த படத்தின் கதை 1001 இரவுகள் என்ற அரேபிய நாட்டு புற கதையை அடிப்படையாக கொண்டது. ஏராளமான மாயாஜால காட்சிகள் கொண்டது. மனிதர்கள் குரங்காய் மாறுவது, மிருகங்கள் மனிதனாக மாறுவது மாதிரியான ஏராளமான மாயாஜால காட்சிகள் இருந்தது.

இந்த தந்திர காட்சிகளாலேயே படமும் வெற்றி பெற்றது. இதில் டி.ஆர். மகாலிங்கம், பி.எஸ்.சரோஜா, என்.எஸ்.கிருஷ்ணன், டி.ஏ. மதுரம், பி.கே.சரஸ்வதி, உள்ளிட்ட பலர் நடித்திருந்தார்கள்.



# ரஜினியின் அடுத்த இயக்குநர் யார்?



நடிகர் ரஜினிகாந்த் தற்போது “கூலி“ படத்தில் நடித்து முடித்து “ஜெயிலர்“2ஆம் பாகத்தில் பிஸியாக நடித்து வருகிறார். இதையடுத்து ரஜினிகாந்த் வேல்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனத்தின் தயாரிப்பில் நடிக்கவுள்ளார் என்கிறார்கள்.

இந்த படத்திற்கான கதை கேட்கும் பணியில் ஐசரி கணேஷ் மற்றும் ரஜினிகாந்த் இருவரும் ஈடுபட்டு வருகின்றனர்.

சமீபத்தில் எச். வினோத் ரஜினியை சந்தித்து கதை கூறியுள்ளார். இவர் அல்லாமல் “சித்தா“, “வீர தீர சூரன்“ பட இயக்குநர் அருண் குமாரும் ரஜினிக்கு கதை கூறியுள்ளார். இவர்களில் ரஜினியின் அடுத்த படத்தை யார் இயக்குவார் என்பது குறித்து இன்னும் முடிவாக வில்லை.



# மீண்டும் பொலிஸான விஜய்

தற்போது எச்.வினோத் இயக்கும் ஜனநாயகன் படத்தில் நடித்து வருகிறார் விஜய்.

தளபதி வெற்றிக் கொண்டான் என்ற கதாபாத்திரத்தில் விஜய் நடிக்கும் இப்படத்தின் டீசர் விஜய்யின் பிறந்தநாளான ஜூன் 22ஆம் திகதி வெளியாகிறது.

இந்நிலையில் தற்போது இப்படத்தின் படப்பிடிப்பு தளத்தில் விஜய் பொலிஸ் வேடத்தில் நிற்கும் புகைப்படம் ஒன்று சோசியல் மீடியாவில் வைரலாகி வருகிறது.

ஏற்கனவே தெறி படத்தில் பொலிஸாக நடத்திருந்த விஜய் அதன் பிறகு இப்போது மீண்டும் ஜனநாயகனில் பொலிஸ் வேடத்தில் நடித்திருக்கிறார்.

# அண்ணன் வந்தால் தம்பி வரமாட்டார்



ஆர்.ஜே. பாலாஜி இயக்கும் சூர்யா 45 திரைப்படத்தின் படப்பிடிப்பு இறுதிக்கட்டத்தில் உள்ளது. இப்படத்தின் போஸ்டர் சூர்யாவின் பிறந்தநாளான ஜுலை 23ஆம் திகதி வெளியிடப்படும் என கூறப்படுகிறது.

இதனைத்தொடர்ந்து தீபாவளி பண்டிகைக்கு இப்படத்தை வெளியிடத் திட்டம் உள்ளதாம். அப்படி தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சூர்யா 45 திரைப்படம் வெளியாகும் பட்சத்தில் கார்த்தியின் ‘சர்தார் 2’ படத்தின் வெளியீடு தள்ளிப்போகும் வாய்ப்புகள் இருப்பதாகவும் தகவல்கள் வருகின்றன.

# நினைத்து கூட பார்க்கவில்லை



இயக்குநர் ஷங்கரின் மகளான அதிதி தமிழில் விருமன் படம் மூலம் நாயகியாக அறிமுகமானார். தொடர்ந்து மாவீரன், நேசிப்பாயா போன்ற படங்களில் நடித்தார்.

தற்போது தெலுங்கில் பெல்லம் கொண்ட ஸ்ரீனிவாஸ் ஜோடியாக பைரவம் என்ற படத்தில் நடித்து, அங்கு நாயகியாக அறிமுகமாகிறார். விஜய் கனகமெடலா இயக்க, மே 30இல் படம் வெளியாகின்றது.இது தொடர்பில் அதிதி கூறுகையில், விருமன் படத்தை பார்த்து இப்பட இயக்குநர் விஜய் இந்த வேடத்திற்கு நான் சரியாக இருப்பேன் என வாய்ப்பு வழங்கினார். தெலுங்கில் நடிப்பது கஷ்டம் என நினைத்தேன். ஆனால் நடிக்கும்போது அப்படி தோன்றவில்லை. சின்ன வயதில் அப்பாவுடன் ராமோஜி ராவ் பிலிம் சிட்டிக்கு வந்துள்ளேன். ஆனால் என் படத்தின் படப்பிடிப்புக்கும் அங்கு வருவேன் என நினைத்து கூட பார்க்கவில்லை, கனவு போல் உள்ளது என்றார்.







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


Jasmine Silk House
ஆடைகளின் ராணி
பட்டு, பாரம்பரியம்,
யஸ்மின் சில்க்கவுஸ்
இவை மூன்றையும்
பிரிக்கவே முடியாது
" என்றும் புதியது
ஆடைகள் என்றும் புதியது ! "
Tel: 02102 844744
HP: 0173 1937 325
"Jasmine Silk House" Fester Str.50- 40882 Ratingen


TRUST TRAVELS
Reisebüro
இலங்கை, இந்தியா மற்றும் அனைத்து நாடுகளிற்குமான
பயணச்சீட்டுகள்,
விசாக்கள் அனைத்தையும்
குறைந்த செலவில் விரைவாகப் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்...
TRUST TRAVELS
A9 Road,Kilinochchi,
Srilanka.
+94 776 668 381
trusttravelsffm@gmail.com
TRUST TRAVELS
Mosel str 33
60329 Frankfurt am main
+49 176 45656520
IndiGo


மருதம் தங்ககம்
HOTEL MARUTHAM
A9 வீதி, கிளிநொச்சி
நகரின் மையத்தில்,
அனைத்து வசதிகளுடன்
புதிய தங்குமிடம்.
+94 212 286 677
+94 776 665 685
Non smoking rooms
Parking
Family rooms
24 Hours front desk
Lift
AC/NON AC
ROOMS
A/C Rooms
Intercom system
Van Hire services
Attached bathrooms
TV


KANTHAN
JEWELRY MARKT
காந்தன் தங்க நகை மாடம்
தரமான தங்க நகைகள்
புத்தம் புது டிசைன்களில்
எம்மிடம் கிடைக்கும்.
யேர்மனி டோட்மூண்ட் நகரில்
பொன் ஒளி வீசும்
காந்தன்
தங்க நகை
மாடம்
RHEINISCHE STR. 72 / 44137 / DORTMUND / GERMANY
0172 8684 203 / 0231 5898 7828 /


Jaffna SUPER.MARKT
Jaffna Super markt
WELCOME IM Jaffna SUPER.MARKT
Lebensmittel aus Asien, Afrika,China und Orient
எம்மிடம் நம்பி வாங்கோ...! சந்தோசமாகப் போங்கோ...!!!
Tel: 0179 2310 560
Lido a Casa
...online bestellen auf
www.lidoacasa-ms.de
Wolbecker Str.16a – 48155 Münster (Eingang von Bremer Platz neben Parkhaus Ausgänge)